27 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

+94757000791 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com பதிவு இல: PV 00249082 ISSN 2792-1026

மாதந்தோறும் இதழ் - 27 28 பெப்ரவரி 2023 @skytamil.lk





கத்தாரில் நடைபெற்ற புதுகை சிக்கந்தர் எழுதிய காயங்களின் கரும்பலகை நூல் வெளியீட்டு விழா



என் எழுத்துக்கு ஒரு தசாப்தம் நூல் வெளியீட்டு விழாவும் நூல் விமர்சனமும்.



**புஹாரி நளீர்**
எழுத்தாளர், நடிகர்
அவர்களுடனான நேர்காணல்



**ஆயிஷா ஷேக்**
அதிபர், கஹகொள்ள பத்ரியா தியத்தலாவ
அவர்களுடனான நேர்காணல்



## ஆளுமை அறிமுகம்


# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதந்தோறும் | இதழ் - 27 | 28 பெப்ரவரி 2023





கத்தாரில் நடைபெற்ற புதுகை சிக்கந்தர் எழுதிய காயங்களின் கரும்பலகை நூல் வெளியீட்டு விழா

04 பக்கம்

13 பக்கம்

ஸ்கை தமிழ் ஊடகத்திற்கு கிடைத்த மற்றுமொரு கௌரவம்!





புஹாரி நளீர்
எழுத்தாளர், நடிகர்
அவர்களுடனான நேர்காணல்

24 பக்கம்

29 பக்கம்

என் எழுத்துக்கு ஒரு தசாப்தம் நூல் வெளியீட்டு விழாவும் நூல் விமர்சனமும்.





ஆயிஷா ஷேக்
அதிபர், கஹகொள்ள பத்ரியா தியத்தலாவ
அவர்களுடனான நேர்காணல்

40 பக்கம்

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர்

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித்
முஹம்மட் ஹாசில்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ்
தாரிக் முஹம்மத்
குலசிங்கம் கிலசன்
ஜவ்சன் அஹமட்
பாத்திமா சகியா

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட்
கமறுன் நிஸாம்டீன்
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா
மஜினா உமறு லெவ்வை
சிவபாலன் கற்ப ஹாசினி
பெனாஷில் ஷிப்னா
நிஹாசா நிசார்
றிஹானா இஷாக்

**மேற்பார்வையாளர்:**
றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்

27 ஆவது
பெப்ரவரி மாத இதழ்

# துணிந்தெழு

## வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com



**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94781069510

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk
Scan QR Code



# கத்தாரில் நடைபெற்ற புதுகை சிக்கந்தர் எழுதிய காயங்களின் கரும்பலகை நூல் வெளியீட்டு விழா

கத்தார் சகாபாக்கள் நூலகம் நடத்திய புத்தக வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை (17-02-2023) மிகச்சிறப்பாக எல்லோரும் பாராட்டும் வண்ணம் அமைந்திருந்ததில் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தேன்..

காயங்களின் கரும்பலகை கவிதை நூல் எனது இரண்டாவது கவிதை நூல், அதற்காக வெளியீட்டு விழா குறித்து சகாபாக்கள் நூலகத்தில் அமர்ந்து கலந்தாலோசித்தபோது நூலை வெளியிட அண்ணன் முஸ்தபா அவர்களை தேர்வு செய்து அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள அண்ணன் சக்திவேல் மகாலிங்கம், அண்ணன் அந்தோணிசாமி சந்தானம், அண்ணன் ஆரூர் பாலாஜி, அண்ணன் சாதிக் பாட்சா, அண்ணன் நெடுங்குளம் அன்சாரி, கவிஞர் தஞ்சாவூரான், செல்வி சபி கிருஷ்ணவேல் போன்ற சான்றோர்களை கேட்டுக்கொண்டோம்..

நிகழ்வுநாள் அன்று தவிர்க்க முடியாத காரணத்தால் அண்ணன் சக்திவேல் மகாலிங்கம் அவர்கள் கலந்து கொள்ள முடியவில்லை...அதுபோன்றே தாயகத்திலிருந்தபடி


**புதுகை சிக்கந்தர்**

குடந்தை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் கவிஞர் அய்யப்பன், அண்ணன் மாத்யூ, குடந்தை திருவடிக்குடிகள் சுவாமிகள், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பாத்திமா முஸாபர் அவர்கள், இயக்குனர் இரா. சரவணன் போன்றவர்கள் வாழ்த்து செய்தியை அனுப்பியிருந்தார்கள்..

வாழ்த்துரை வழங்க தோழமையாளர்கள் ரெஜினா கோபால்சுவாமி, சிந்து தமிழ், பாத்திமா நிஷ்ரா ஆகிய மூவரையும் கேட்டுக்கொண்டோம்.. விழா அழைப்பிதழை திரு கேசவன் அவர்கள் சிறந்த முறையில் அமைத்துத் தந்தார்கள்..

நிகழ்வுக்கு வருகை தந்திருந்த பார்வையாளர்கள் உட்பட அனைவருமே சிறப்பு அழைப்பாளர்களாகவே சகாபாக்கள் நூலகத்தால் கருதப்பட்டனர். நூல் வெளியீட்டு நிகழ்வினை புகைப்படங்களாலும், காணொளிகளாலும் சிறப்பு சேர்க்க.

ஸ்கை தமிழ் நியூஸ், Q தமிழ் ரேடியோ ஊடகங்கள் வந்திருந்தனர்..



தாயகம் செல்வதை நூல் வெளியீடு காரணமாக தள்ளிவைத்த அண்ணன் ஆயங்குடி நாஸர், உம்ரா பயணம் மேற்கொண்ட அண்ணன் தஸ்தகீர் சுலைமான் உடல்நிலை சரியில்லாதிருந்தும் சிறப்பாக நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்கள், நிகழ்வை தலைமையேற்ற அண்ணன் மணிகண்டன் அய்யப்பன் சிறப்பான முறையில் நிகழ்வை நகர்த்திச்சென்றார்கள்..

இந்நிகழ்வில் கத்தாரிலுள்ள அரசியலமைப்புகள், சமூக அமைப்புகள், சமூக ஆர்வலர்களென பலரும் பங்குபெற்றனர்.. புதுகை சிக்கந்தரின் நூல் வெளியீடு போன்றே பலரது நூல்களை வெளியிட சகாபாக்கள் நூலகம் தயாராகவே உள்ளது தோழமையாளர்களே உங்கள் புத்தகங்களையும் வெளியீடு செய்யுங்கள் ..

வாசிப்பே வாழ்வின் நெறி..





# சீகிரியா

சீகிரியா அல்லது சிங்ககிரி என்பது இலங்கையின் மத்திய மாகாணத்தில் தம்புள்ள நகருக்கு அருகில் வடக்கு மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு பழங்கால பாறைக் கோட்டை ஆகும். இது சுமார் 180 மீட்டர் (590 அடி) உயரமுள்ள பாறையின் பாரிய நெடுவரிசையால் ஆதிக்கம் செலுத்தும் வரலாற்று மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த தளமாகும்.

பழங்கால இலங்கை வரலாற்றான சூலவம்சத்தின் படி, இந்த பகுதி ஒரு பெரிய காடாக இருந்தது, பின்னர் புயல்கள் மற்றும் நிலச்சரிவுகளுக்குப் பிறகு அது ஒரு மலையாக மாறியது மற்றும் காசியப்பன் மன்னரால் (கி.பி 477 - 495) தனது புதிய தலைநகருக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

அவர் தனது அரண்மனையை இந்த பாறையின் மேல் கட்டினார் மற்றும் அதன் பக்கங்களை வண்ணமயமான ஓவியங்களால் அலங்கரித்தார். இந்தப் பாறையின் பக்கவாட்டில் ஒரு சிறிய பீடபூமியில் அவர் ஒரு பெரிய சிங்கத்தின் வடிவத்தில் ஒரு நுழைவாயிலைக் கட்டினார். இந்த அமைப்பிலிருந்து இந்த இடத்தின் பெயர் சிங்ககிரி, சிங்கப் பாறை எனப்பட்டது. காசியப்பனின் மரணத்திற்குப் பிறகு தலைநகரம் மற்றும் அரச அரண்மனை கைவிடப்பட்டது. இது 14 ஆம் நூற்றாண்டு வரை புத்த மடாலயமாக பயன்படுத்தப்பட்டது. சீகிரியா இன்று யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

**-காரிகை-**

இது பண்டைய நகர்ப்புற திட்டமிடலின் சிறந்த பாதுகாக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும்.சிகிரியா முதல் ஆயிரம் ஆண்டுகாலத்தின் மிக முக்கியமான நகர்ப்புற திட்டமிடல் தளங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது, மேலும் தளத்திட்டம் மிகவும் விரிவானதாகவும் கற்பனையானதாகவும் கருதப்படுகிறது. இந்த திட்டம் மனிதனால் உருவாக்கப்பட்ட வடிவியல் மற்றும் இயற்கை வடிவங்களை இணைக்க சமச்சீர் மற்றும் சமச்சீரற்ற கருத்துகளை ஒன்றிணைத்தது. பாறையின் மேற்குப் பகுதியில் அரச குடும்பங்களுக்கான பூங்கா ஒன்று சமச்சீர் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவில் அதி நவீன மேற்பரப்பு அமைப்புகள் உட்பட தண்ணீரைத் தேக்கி வைக்கும் கட்டமைப்புகள் உள்ளன, அவற்றில் சில இன்றும் சிறப்பாக செயற்டுகின்றன.

தெற்கில் மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கம் உள்ளது. இவை இலங்கையின் உலர் வலயத்தின் முந்தைய தலைநகரில் இருந்து பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. ஐந்து நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளது மிகவும் விரிவான மேற்கு வாயில் அரச குடும்பத்திற்காக ஒதுக்கப்பட்டதாக கருதப்படுகிறது. ஜான் ஸ்டில் 1907 இல் மலையின் முழு முகமும் ஒரு

பிரம்மாண்டமான படத்தொகுப்பாகத் தெரிகிறது...ஒருவேளை உலகில் மிகப்பெரிய படம் இதுவாக இருக்கலாம் என்று எழுதியுள்ளார். 140 மீட்டர் நீளமும் 40 மீட்டர் உயரமும் கொண்ட பாறையின் மேற்கு முகத்தின் பெரும்பகுதியை ஓவியங்கள் மூடியிருக்கும். இந்த ஓவியங்களில் 500 பெண்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இருப்பினும், பெரும்பாலானவை நிரந்தரமாக அழிந்து விட்டன. சிகிரியாவில் மூன்று வகையான தோட்டங்களை காணலாம்.

நீர் தோட்டங்கள், கற்பாறை, தோட்டங்கள், மாடி தோட்டங்கள், மேற்குப் பகுதியின் மத்தியப் பகுதியில் நீர்த் தோட்டங்களைக் காணலாம். இங்கு மூன்று முக்கிய தோட்டங்கள் காணப்படுகின்றன. முதல் தோட்டம் தண்ணீரால் சூழப்பட்ட ஒரு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இது நான்கு பாதைகளைப் பயன்படுத்தி பிரதான வளாகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாதையிலும் தனித்தனியாக நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த தோட்டம் சார் பாக் எனப்படும் பழங்கால தோட்ட வடிவத்தின் படி கட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த வடிவத்தின் எஞ்சியிருக்கும் பழமையான மாதிரிகளில் இதுவும் ஒன்றாகும். இரண்டாவது பாதையின் இருபுறமும் இரண்டு நீண்ட, ஆழமான குளங்கள் உள்ளன. இரண்டு ஆழமற்ற, பாம்பு நீரோடைகள் இந்த குளங்களுக்கு நீரை விநியோகிக்கின்றன. நீரூற்றுகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

நிலத்தடி நீர் வழித்தடங்கள் இந்த நீரூற்றுகளுக்கு நீரை வழங்குகின்றன, மழைக்காலங்களில் அவை இன்னும் செயற்படுகின்றன. இரண்டாவது நீர் தோட்டத்தின் இருபுறமும் இரண்டு பெரிய தீவுகள் அமைந்துள்ளன. இந்த தீவுகளின் தட்டையான பரப்புகளில் கோடைகால அரண்மனைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இரண்டு தீவுகள் வடக்கிலும் தெற்கிலும் தொலைவில் அமைந்துள்ளன. இந்த தீவுகள் முதல் நீர் தோட்டத்தில் உள்ள தீவைப் போன்றே கட்டப்பட்டுள்ளன. மூன்றாவது தோட்டம் மற்ற இரண்டையும் விட உயர்ந்த மட்டத்தில் அமைந்துள்ளது. இது ஒரு பெரிய எண்கோண குளத்தைக் கொண்டுள்ளது, அதன் வடகிழக்கு மூலையில் உயர்த்தப்பட்ட மேடை உள்ளது.

கோட்டையின் பெரிய செங்கல் மற்றும் கல் சுவர் இந்த தோட்டத்தின் கிழக்கு விளிம்பில் உள்ளது.நீர் தோட்டங்கள் கிழக்கு - மேற்கு அச்சில் சமச்சீராக கட்டப்பட்டுள்ளன. அவை மேற்கில் வெளிப்புற அகழி மற்றும் சீகிரியா பாறையின் தெற்கே பெரிய செயற்கை ஏரியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து குளங்களும் ஏரியின் மூலம் நிலத்தடி குழாய் வலையமைப்பைப் பயன்படுத்தி ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, அகழிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. முதல் நீர் தோட்டத்தின் மேற்கில் ஒரு சிறிய நீர் தோட்டம் அமைந்துள்ளது, இதில் பல சிறிய குளங்கள் மற்றும் நீர்நிலைகள் உள்ளன. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சிறிய தோட்டம் காசியப்பன் காலத்திற்குப் பிறகு, 10 மற்றும் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

sky தமிழ் NEWS
தனித்துவமே நமது அடையாளம்
+94757000791 skytamil.lk@gmail.com skytamilnews



## ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் 9ஆம் மற்றும் 10வது

# இலவச ஊடக செயலமர்வு கம்பளையில்...

ஷிஹானா நௌபர் - பிரதம ஆசிரியர்

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் நடத்தப்பட்டு வரும் இலவச ஊடக செயலமர்வு 25.01.2023 கம்பளையில் இரண்டு பாடசாலைகளில் இடம் பெற்றது.

கம்பளை அல் ஹிக்மா மகா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம் நுஹ்மான் அவர்களின் தலைமையில் பாடசாலை ஊடகப்பிரிவின் பொறுப்பாசிரியர்களான எம்.ஐ. பிர்தவ்ஸியா, எஸ்.ஏ.எப் அப்ரா, எம்.எம்.எப் நசூகா ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் நடைபெற்றது. இச்செயலமர்வில் பாடசாலையை சேர்ந்த 31 மாணவர்கள் இணைந்து பயன் பெற்றனர்.

அத்துடன் இரண்டாவது செயலமர்வு கம்பளை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது செயலமர்வானது பாடசாலையின் அதிபர் என்.எம்.எப் நஜீபா அவர்களின் தலைமையில் எம்.ஏ.எஸ் நிகாரா ஆசிரியை அவர்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றது.

இந்த செயலமர்வில் பாடசாலையை சேர்ந்த தரம் 9 முதல் 11 வரையான 142 மாணவர்கள் கலந்து பயன்பெற்றனர். குறித்த செயல் அமர்வின் போது ஊடகம் பற்றிய தெளிவும், ஊடகங்களை பயன்படுத்தும் போது கையாள வேண்டிய உத்திகளும் ஊடகங்களினால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் என்பவற்றுடன் பாடசாலை ஊடக கட்டமைப்பு ஒன்றை நடத்துவது சம்பந்தமான வழிகாட்டல் என்பன வழங்கப்பட்டன.

இவ் ஊடக செயலமர்வினை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு தற்போது ஆசிரியர் குழு உறுப்பினராக செயற்படும். அன்வர்ஷா பாத்திமா ரிஹானா ஏற்பாடு செய்திருந்தார்.

இரு பாடசாலைகளுக்குமான ஊடக செயலமர்வுகள் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஷிஹானா நௌபர் இனால் நடத்தப்பட்டது.

இவை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் நடத்தப்பட்ட 9 ஆம் மற்றும் 10வது செயலமர்வுகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. டிஜிட்டல் ஊடகத்தின் பிரம்மாண்டத்தை நோக்கிய ஸ்கை தமிழின் பயணம் இன்னும் தொடரும்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 27 | 28 பெப்ரவரி 2023



# தலை குனிந்து பார் தலை நிமிர செய்யும்

க.சுந்தர்,
கன்னியாகுமரி -தமிழ்நாடு

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி! ஜூலியஸ் சீசர். புத்தக வாசிப்பு ஒரு மனிதனை மனிதனாக்குகிறது. அமைதி என்னும் உயரிய ஞானத்தை அளித்து தன்னை வாசிப்பவர்களை தலைநிமிர செய்கிறது.

வாளினுடைய கூர்மையும் நூலினுடைய கூர்மையுமே ஒரு நாட்டை ஆளும் என்று கூறுவார்கள். இன்றைய காலகட்டத்தில் நூலினுடைய கூர்மை தான் உலகத்தையே வழி நடத்துகின்றது என்றால் மிகையல்ல. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு. தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். என்ற உயரிய சிந்தனையை போதித்தார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். அவர் எழுதிய திருக்குறள் உலக அறிஞர்களால் கொண்டாடப்பட்டு பல மொழிகளில் பல்வேறு அறிஞர் பெருமக்களால் விரிவுரை எழுதப்பட்டு உலகமெங்கும் உலகப் பொதுமறையாக வலம் வருகிறது.

வாசிப்பு பழக்கம் சிறைக்கைதியாக இருப்பவர்களை கூட நல்லவர்களாக மாற்றி அவர்களை பேனா பிடித்து எழுத வைக்கிறது. சாதாரண நபர்களுக்கு தன்னம்பிக்கை கற்பித்து சரித்திரம் புகழ செய்கிறது மேதைகளின் புத்தகங்கள்."புரட்சிப் பாதையில் துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே" என்று கூறினார் ரஷ்யப் புரட்சியின் வரலாற்று நாயகன் லெனின். போதும் என்று நொந்து போய், புது வாழ்க்கை தேடுகிறீர்களா. ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு என்ற வரிகளுக்கு சொந்தக்காரர்--இங்கர்சால்.

விடுதலைப் போராட்ட உணர்வுகளை இளைஞர்கள் மனதில் விதைத்திட தன் மரணத்தையே பரிசாகத்தந்த மாபெரும் போராளி பகத்சிங். சிறைச்சாலையில் உள்ள வாசிப்பு சாலையில் 151 நூல்களை வாசித்து ஆறு சிறு நூல்களை வெளியிட்டார். தனது இறுதி மூச்சு வரை புத்தகங்களோடு பகத்சிங் இருந்தார் என்பது வரலாறு. தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாதுரை புற்றுநோயால் உயிரோடு போராடிக் கொண்டிருந்தார்.

சிகிச்சைக்காக அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள் மருத்துவர்கள் இன்று உங்களுக்கு அறுவைச் சிகிச்சை என்றபோது தாம் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால் அதை முடிக்கும் வரை உயிர் காக்கும் சிகிச்சையை தள்ளி வைக்க சொன்னார்.



கப்பலோட்டிய தமிழன் வ உ .சிதம்பரனார் ஆங்கில நூல்கள் பலவற்றை தமிழில் மொழி பெயர்த்தார்.மேலும் நூல்கள் பலவற்றை எழுதி மக்களை சிந்திக்கவும் வைத்தார். உலகின் தலைசிறந்த மெய்யியலாளர், அரசியல் பொருளாதார வரலாற்றியல் வல்லுநர், ஆய்வறிஞர், எழுத்தாளர், சிந்தனையாளர், புரட்சியாளர் என பன்முகப் பரிமாணம் கொண்ட காரல் மார்க்ஸ் இலண்டன் நூலகத்தில் இருபது ஆண்டுக் காலம் படித்து ஆய்வு செய்தார்.

1964யில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சென்னை சென்ட்ரல் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த அண்ணா கைதி எண் “6342” என்ற நூலில் தான் படித்த தமிழ் ஆங்கிலப் புத்தகங்களை பற்றி எழுதியிருக்கின்றார்.

தமிழறிஞர் உ.வே. சாமிநாதய்யர் வாழ்நாள் முழுவதும் ஓலைச்சுவடிகளைத் தேடி எடுத்து பழந்தமிழ் நூற்களைப் பதிப்பித்தவர். அவர் தாம் எண்பத்தைந்தாவது வயதில் என் சரித்திரம் என்ற சுய சரித்திரம் எழுதினார். புத்தகங்கள் துணைக்கொண்டு வானத்தையே வசப்படுத்தலாம். உங்களால் முடிந்தால் சுப நிகழ்ச்சிகளில் புத்தகங்களை பரிசாக வழங்குங்கள். நீங்கள் படித்த பள்ளிக்கூடங்களில் உள்ள வாசிப்புசாலைக்கு புத்தகங்களை பரிசளித்து வளரும் தலைமுறைக்கு வாய்ப்பளியுங்கள். ஒரு புத்தகம் எந்த மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் எக்காலத்தில் எழுதப்பட்டிருந்தாலும் அது அந்த ஒரு மொழிக்கே உரியது இல்லை. மானிட சமூகம் முழுவதற்குமானது.

புத்தகங்கள் வாசிப்பதன் வாயிலாக ஒருவரின் சிந்தனை திறன் மேலோங்கும், சொல்வளமும், கற்பனை வளமும் பெருகும். எது குறித்தும் எவரிடமும் தயக்கமின்றி பேச முடியும். தனிமையில் சிக்குண்டு தவிப்பதை தவிர்த்து விடும். மன அழுத்தத்தை குறைக்கும்.

“நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு” என்று தமிழ் மூதாட்டி ஔவையார் கூறியது அனைவருக்கும் ஏற்ற உண்மை. இன்றைய நல்ல வாசகன் தான் நாளை நல்ல தலைவனாக முடியும்.

வாசிப்பு பெருகட்டும் முயற்சி தொடரட்டும்.



# விதியின் வலி

கரங்களை இறுக பற்றிக் கொண்ட
விலங்கினை எண்ணி
கலங்கிட மனமில்லை.!!

கழுத்தினை கவ்விய
சவால்களை கண்டு
நிலத்தினில் விழும்
மடமையும் இனி இல்லை.!!

ஆனாலும்
வலி எழுதிய விதியின் பாதை
வழி நெடுகிலும் அழைத்தே செல்கின்றது.!!

காரிருளில் கண் சிமிட்டும்
மின்மினியாய்
அங்கே
காட்சியொன்று தெரிகின்றது.!!

அது தான்
என் வெற்றியின் விம்பமென
நம்ப வைத்துக் கொள்கின்றேன்.!!

ஏறாவூர் - அஸ்லம்




# சிகரமாகிய வெற்றி

காலம் கனிந்தது இன்று
காலத்தின் கதவுகள் திறந்து
காத்து நின்றழைத்தன
காணாத பெரும் வெற்றிகளை,

போட்டி நிறை உலகில்
போராடி சாதித்த சாதனைகள்
போதாமல் இருப்பினும் இன்று
போதர வெற்றிகள் என்பேன்,

“பாஸித்” இன் உள்ளமதில் எண் ஆக
பாரிலே பல வண்ணங்கள் கூடி வர
பார்ப்போரின் மனங்கள் திகைத்து
பா ஆவல் கொள்ள காண்கிறேன்.

‘ஸ்கை தமிழ்’ எனும் இருக்கை
இடர்கள் பலதை கடந்து இன்றும்
இளையார் பலரை சுமந்தபடியே
இளைப்பின்றி ஓடும் நதியாகியது,

‘துணிந்தெழு’ மகுடம் பெற்று
துருவங்கள் முழுக்க உம் பணி
துறைகள் பலதை சுமந்தன - பாரில்
துணை இணையமாகிப் போக,

இத்தினம் இன்னும் முன்னேற
இதயத்தில் இருந்து வருகின்றது
இதமான வாழ்த்துரை ஒன்று
இனிப்பாகிப்போகும் ஐயமில்லை,

ஆசிரியர் குழுவின் அயராத சேவை
ஆராய்ச்சி புரியும் அழகிய பண்பும்
ஆரோக்கியமாய் பணியில் மிளிர
ஆவணங்கள் என்பேன் நான்.

நிர்வாகக் குழுவும் துணைபோக
நித்தமும் செய்கின்ற சேவைகள்
நிலைத்து நின்றிடவும் - பாரினில்
நிகர்ப்புதமான வாழ்த்துக்கள்.

ஈராண்டு எத்திக்கொண்டும்
ஈடேற்றம் காண்பது மட்டும்
ஈடு இல்லாப் பயணத்தில்
ஈண்டு கொண்ட வெற்றி,

சுவை கண்ட வெற்றி
சுமை நிறைப் பயணத்தில்
சுடர் விட்டெறிந்தபடி வேண்டும்
சுகமாக இன்றும் என்றும்.

கவிப்பொய்கை - ஜவ்சன் அஹமட்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 27 | 28 பெப்ரவரி 2023



# நூற்றாண்டு விழா காணும் கண்டி

## உடத்தலவின்னை ஜாமியுல் அஸ்கர் தேசிய பாடசாலை

ஷிஹானா நௌபர் - பிரதம ஆசிரியர்

இந்து சமுத்திரத்தின் முத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மத்திய மலைநாட்டில் கண்டி மாநகரில் குட்டி யாழ்ப்பாணம் என அழைக்கப்படும் உடத்தலவினை மண்ணின் மைந்தர்களை ஈன்ற தாய் ஜாமியுல் அஸ்ஹர் தேசிய பாடசாலை 1921 முதல் இன்று வரை 10 தசாப்தங்களைக் கடந்து நூற்றாண்டு விழா கோலம் பூண்டு கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

ஜாமியுல் அஸ்ஹர் தேசிய பாடசாலை பல்லாயிரக்கணக்கான கல்விமான்களையும் அதேபோன்று உலகளாவிய ரீதியில் பல்துறை சார்ந்த ஜாமியன்களையும் உருவாக்கியுள்ளது

இன்று தன் தாயின் நூற்றாண்டு விழாவை ஊரே ஒன்றிணைந்து கொண்டாடுகின்றது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜாமியன்ஸ் கரப்பந்தாட்ட போட்டி Mercado சந்தை. மரத்தன் ஓட்டப்போட்டி, கிரிக்கெட் சுற்றுப்போட்டி, வலைப்பந்தாட்ட போட்டி, வத்தேகம வலயமட்ட தமிழ் மொழி பாடசாலைகளுக்கு இடையிலான கட்டுரை போட்டி என தன் தாய் புகட்டிய அத்தனை திறமைகளையும் தன் தாய்க்காய் சமர்ப்பித்து கொண்டாடுகின்றனர்.

நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் நிகழ்ச்சிகளில் மாபெரும் கலை விழா சங்கமம் வெகு விமர்சையாக மூன்று நாட்கள் ஆறு கட்டங்களாக கொண்டாடப்பட்டது. கடந்த (22) ஆம் திகதி இரண்டாம் நாளாக நடைபெற்ற சங்கமம் கலை விழாவில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஷிஹானா நௌபர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவருடன் இலங்கை மின்சார சபையின் ஓய்வு பெற்ற மேலதிக பொது முகாமையாளரும் ஜாமியுல்லாஸ்கர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவியுமான திருமதி நூருல் முனாவ்வரா அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துள்ளார். ஊரை சேர்ந்த பல முக்கிய பிரமுகர்கள் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டுள்ளனர்..

கலை நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் அத்தனை திறமைகளும் மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. கலை நிகழ்வின் ஒவ்வொரு அம்சமும் நூற்றாண்டை எவ்வளவு பிரம்மாண்டமாக கொண்டாடுகின்றனர் என்பதை பறைசாற்ற கூடியதாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளர் பாடசாலைக்கு சமூகம் அளித்திருந்த வேளையில் பாடசாலையின் பிரதி அதிபர் மற்றும் உப அதிபருடனான கலந்துரையாடலின் போது பாடசாலை ஊடக வலையமைப்பிற்கு தேவையான ஊடக

செயலமர்வு மற்றும் அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் ஊடாக ஒழுங்கு அமைத்துக் கொள்வதற்கான கலந்துரையாடல் பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர் சகோதரர் எம். என் எம் ரமலான் அவர்களுடைய ஒத்துழைப்புடன் இடம்பெற்றது.

இது மாத்திரம் இன்றி ஜாமியன்களின் நடைப்பயணம், பாடசாலை பரிசளிப்பு விழா என இன்னும் பல சுவாரசியமான விடயங்கள் விழாக்கோலம் பூன காத்துக் கொண்டிருக்கின்றது. ஜாமியுள் அஸ்கர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்கு ஸ்கை தமிழ் ஊடகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை தன் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது..



# ஸ்கை தமிழ் ஊடகத்திற்கு கிடைத்த மற்றுமொரு கௌரவம்!

**ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு நிர்வாகிகளுக்கு கத்தார், தமிழர் திருவிழாவில் தி.மு.க மாணவர் அணி தலைவரினால் விருது வழங்கி கௌரவம்!**

கத்தார் வெளிநாடு வாழ் தமிழ் இந்திய சங்கம் நடத்திய தமிழர் பொங்கல் திருவிழா 10.02.2023 வெள்ளிக்கிழமை கத்தார் கிரிக்கெட் ஸ்டேடியம் ஏசியன் டவுனில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு தி.மு.க மாணவரணி தலைவர் வழக்கறிஞர் சு.ராஜீவ்காந்தி அவர்கள் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கத்தார் மண்ணில் சிறப்பாக ஊடகப்பணியை மெற்கொண்டு வருகின்ற ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் மற்றும் அதன் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி ஆகியோருக்கு தி.மு.க மாணவரணி தலைவர் வழக்கறிஞர் சு.ராஜீவ்காந்தி அவர்களால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.







# தொழுகை

நிஜாம் பாத்திமா சன்ஹா.
புத்தளம்.

முதன்மையான கடமைகள் எனும் ஐந்து தூண்களினால் கட்டியெழுப்பப்பட்டதே இஸ்லாம். அதில் இரண்டாம் கடமையானதும், கப்ரில் இரண்டாம் கேள்வி கணக்கு பற்றியதும் தொழுகை ஆகும். இது அரபில் அஸ்ஸலாஹ் என்றும், இன்னும் சில முஸ்லிம்களால் நமாஸ் என்றும் அழைக்கப்படுகின்றது. இதனை தினமும் ஐவேளைகள் பேண வேண்டியது கட்டாயமாகும். பர்ளுகள் ஐந்து (புஜ்ர், ளுஹர், அஸர், மஃரிப், இஷா) என்றாலும் சுன்னத்துக்கள் ஏராளம். உடல், மன, ஆன்மீக வழிபாட்டில் முதலாவது ஆன இது படைத்தவனை சுஜூத் செய்யும் பாக்கியத்தையும், எத்தடையுமின்றி அவனுடன் நேரடியாக பேசும் சூழ்நிலையையும் உண்டாக்குகின்றது. தொழுகையானது பல தடவைகள் குனிவதும், சிரம் பணிந்த சுழற்சிகளாலும் ஆனது. ஆதலால் நம்மை நாம் அறியாமலே தினமும் உடற்பயிற்சி செய்கின்றோம். மேலும் தொழுகைக்காக வுழு செய்யும் போது பாவங்கள் நம்மை விட்டு கழன்றோடுகின்றது.

எச்சந்தர்ப்பத்திலும் தொழுகையை விட்டு விட சலுகை இல்லை. பயணி என்றால் சுருக்கியும், சேர்த்தும், பிணி என்றால் தயமம் செய்தும் தொழலாம். தொழாமைக்கு காரணம் சொல்லி தப்பித்து விட முடியாது. கலிமாச் சொல்லிய ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டிய இதனை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தைப் பற்றி மார்பு தட்டி வாய்க்கு வாய், சொல்லுக்குச் சொல், வரிக்கு வரி ஆழமான கருத்துக்களை பேசும் நாம் அறிந்த சகோதரர்கள் கூட இதில் பேணுதல் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள். வருந்தக் கூடிய விடயம் இது. தொழுகையை விடுவது என்பது சாதாரணமான குற்றமில்லை. இறைமறுப்புச் செயல் என்று நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். மேலும் தொழுகையை விடுபவன் ஸகர் எனும் நரகில் நுழைவான்.

"ஒரு முஃமினுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்." எனும் வசனத்தை நோக்குகையில் வேற்று மத சகோதரர்களிடம் கூட இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூற நாம் தகுதியற்றவர்களாகி விட்டோம். நம் மதத்தை நாமே ஒழுங்காக பின்பற்றாத நிலையில் மற்றவரிடம் எப்படி எடுத்துரைப்பது? மன நிம்மதி இல்லை என்றால் மட்டும் சிரம் பணிகின்றாயே. உன் தேவை முடிந்ததும் மறந்து விடுகின்றாயே. இது எந்த விதத்தில் நியாயமானது? ஒரு தடவைக்கு மேல் கேட்டால் வெறுப்பைக் காட்டும் மனித சமூகத்திடம் கேட்க மறுக்காத நாம், கேட்பதை மட்டும் விரும்பும் அல்லாஹ்விடம் கேட்க மறுக்கின்றோம். தொழுகையில் சுஜூதிலும், தொழுகைக்குப் பின் கையேந்தி கண்ணீர் வடித்து கேட்கும் துஆவும் நிராகரிக்கப்படப் போவதில்லை.

எமக்கு முன் வாழ்ந்த உத்தம ஸஹாபாக்கள் இறைவனை வணங்கியது போலும், அதன் பின்னால் வந்த பெரும் பெரும் முத்தகீன்கள், நல்லடியார்கள் வழிபட்டது போல் எங்களால் முடியாது போனாலும் ஐந்து நேரத் தொழுகைகளையும், அதன் முன் பின் சுன்னத்தான தொழுகைகளைப் பேணித் தொழுவோம். எமது குடும்பம், எமது மக்கள், முஸ்லிம்கள் சகோதரர்கள் போன்றோர்களுக்கு தொழுகையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி அவர்களுக்கும் நன்மையை நாடுவோம். இதனையே அல்லாஹ், றசூல் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பி இருக்கின்றார்.

இவ்வாறான நற்போதனைகளை ஸஹாபாக்கள் அதிகமதிகம் மேற் கொண்டுள்ளனர். நன்மைகளை ஏவுதல், தீமைகளை விட்டும் தடுத்தல் போன்ற விடயத்தில் நாயகம் ஸல் அவர்களிடம் உறுதி மொழியும் எடுத்திருக்கின்றனர்.

ஆகவே நாமும் உறுதி மொழி எடுத்திடுவோம். தொழுகையைத் தவற விடமாட்டோம். அடுத்த நொடி நிச்சயமற்ற வாழ்வு இது. எம்முடன் மண்ணறைக்கு வரப் போவது நாம் செய்த நல்லமல்கள் மட்டுமே. அல்லாஹ்வின் பக்கம் மீண்டிடுவோம். பாவக்கறைகளைப் போக்கிடுவோம். வேளா வேளைக்குத் தொழுதிடுவோம். இன்றே கையேந்தி மன்றாடிடுவோம். முஸ்லிம் சகோதரராய் மரணித்திடுவோம்.




# நிலையான வாசிப்பு

ஜனா அஸ்மி

வீதியிற்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே
அறிவிற்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலே !!!

வாசிக்காமல் யாருக்கும்
வளர்வதில்லை அறிவு
இதனை நேசிக்காமல் போனால்
மதியிற்கு முறிவு !!!

பொது அறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகங்கள்
அனைத்தையும் நேசி !!!

நூலகம் சென்று வர
நாளும் நீ தவறிவிடாதே
நுண்மதியை பெருக்க வைக்கும்
நூல் பல கற்க மறந்துவிடாதே !!!

இருந்த இடத்தில் எல்லாம் அறிய
கையடக்க நூலே போதும்
வாசித்து அறியும் வழக்கமிருந்தால்
உன் சுடர் வீசும் ஞானமே போதும் !!!

வாசிப்பை நாளும் நேசிப்போம்
நல்ல நூலனைத்தையும் சுவாசிப்போம்
அறிவாளியாக்கும் உன்னை அறிவாய்
அனைவரும் போற்றிட இன்றே உயர்வாய் !!!

# மன்னித்துவிடு இலங்கைத் தாயே!



எம்மை நெஞ்சினில் சுமக்கும் தாயே!
மலரெனத் தாங்கி -உன்
மடிதனில் நிதமும்
உறங்கவைத்து தாலாட்டிடும்
இலங்கைத் தாயே!

உன்னை நித்தமும் நேசித்தோம்!
வாயாரப் பூஜித்தோம்!
வானளவு வாழ்த்தினோம்!

இன்று எங்கள் தாயே!-உன்
நிலை கண்டு
நிர்க்கதியற்றுப் போனோம்!
தரங்கெட்ட தலைவர்களால்
தடுமாறிப் போனோம்!

பொக்கிஷம் பொங்கும்
திரு நாட்டிலே எம்மை
புதைத்திடப் பார்க்கின்றனர்..
கஷ்டங்கள் தாங்கி
விதைத்திடத் துணித்தால்
வேரோடு அறுத்திட முனைகின்றனர்!

உன் நிழலிலே சாய்ந்து
வாழ்ந்து மடிந்திட நினைத்தால்
கசக்கி தொலைதூரமாய் எறிகின்றனர்!

லங்கா தாயே..
உன்னை விட்டு விலகிட
உள்ளம் நினைக்கின்றது!
மாற்றான் தாயின் மடியினில்
அடைக்களம் தேடிட
இதயம் துடிக்கின்றது!
இருப்பினும் உன்னை விட்டுப்பிரிவதால்
மனம் வேதனை அடைகின்றது!

தாயே எம்மை மன்னிப்பாயா!!

விலை மதிப்பற்ற உன்னை
கூர் கூராய்ப் பிரித்து விற்று
எம்மை பள்ளத்திலே
வீழ்த்தி விட்டார்கள்!
தட்டுத்தடம்மறி ஏறி வந்திட
தள்ளியே விடுகின்றார்கள்!
எம்மை தாங்கும் சக்தியை
நீயும் இழந்த கொடுமைதனை
மனம் தாளவில்லை தாயே!

உன்னை விட்டு விடைபெறுகின்றோம் !
எம்மை மன்னித்துவிடு
அன்னையே..

உன் அழகுக்கு எதுவும்
ஈடு இல்லை
இருப்பினும் இங்கு நாம்
இருப்பதில் இனியும் இன்பமில்லை!!
துன்பங்கள் சூழ்ந்து
வாழும் வாழ்விலும்
பயனேதும் இல்லை!
மன்னித்துவிடு தாயே!
உன்னை விட்டு விடை
பெறுகின்றோம்!

லுதுபியா லுக்மான்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 27 | 28 பெப்ரவரி 2023



# நகர்ப் புறங்களில் சில வினோத மனிதர்கள்

ஷாக்கிர் கிலுறுதீன்
தோப்பூர்

இந்த விந்தை மிகு உலகில் எவ்வளவுதான் பாரிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் எவ்வளவுதான் தொழிநுட்பம் வளர்ச்சி கண்டாலும் இன்னும் எவ்வளவுதான் பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும், அன்று தொடக்கம் இன்று வரை ஏழைகள் ஏழைகளாகவே இருந்து வருகின்றமையானது மனதை உருக்கி பல வினாக்களை எழுப்புகின்றன.

இது உண்மையிலேயே யதார்த்தம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏழைகள் பரவலாக எல்லா இடங்களிலுமே வாழ்ந்தாலும், அதிலும் குறிப்பாக நகர்ப்புறங்களில் அனாதைகளாக, வீதியோரச் சிறார்களாக, ஊனமுற்றோர்களாக ஏன் இன்னும் உணவேயற்று மனநலம் குன்றியோர்களாக இப்போதும் கூட அதிகமானோர் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் கண்கூடாக காண்கின்றோம்.

இவ்வாறு எத்தனையோ ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் தமது ஒவ்வொரு நாட்களையும் பசியோடும் பயத்தோடும் கழித்தவாறு தான் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குகென எந்த ஒரு நோக்கமும் கிடையாது. இன்னும் எந்த ஒரு விருப்பமோ ஆசையோ கூட கிடையாது. ஏனென்றால், இவற்றையெல்லாம் தீர்மானித்துக் கொண்டிருப்பது அவர்களை சுற்றி வாழ்பவர்களும் நாமும் தான். நாள் தோறும் அவர்கள் தங்களது வறுமையை கஷ்டத்தை யாரிடமாவது சொல்லி அவர்களிடமிருந்து எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு தங்களது கைகளை ஏந்தியவாறு பாதைகளில் சுற்றித் திரிந்துக் கொண்டிருக்கின்றார்கள். தங்களுக்கு என்று பாரிய இலட்சியங்கள் இல்லை தான், என்றாலும் அன்றைய நாளுக்கு தேவையானதை மாத்திரமாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் ஒரே இலட்சியமாக இருந்து வருகின்றது.

நகர்ப்புறங்கள் எவ்வளவு தான் வளர்ச்சி அடைந்து, இனி இல்லை என்று கூறுமளவு விஞ்ஞானத்தின் உச்சத்தை அடைந்திருந்தாலுமே, இத்தகைய ஏழைகள் தினமும் எதிர்நோக்கும் வாழ்க்கையின் சவால்களை நாம் அவதானிக்கும் போது இவ்வாறான நகரங்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் தோல்வி என்ற நிலைப்பாட்டிற்குத் தான் வர வேண்டும்.

அது ஒரு புறம் இருக்க, ஏதோ ஒரு வகையில் இவர்கள் போன்ற நகர்ப்புறங்களில் வாழ்கின்ற ஏழைகளை நாம் எப்போதாவது எங்கேயாவது ஒரு முறையேனும் சந்திக்க



நேர்ந்த அந்த நொடியில், எம்மில் எவராவது அந்த மனிதர்களை பார்த்து சிந்தித்திருப்போமா அல்லது அவர்களை பார்த்து கொஞ்சம் மனம் உருகியாவது இருந்திருப்போமா என்றால் அது கேள்விக் குறிதான்.

எப்போதும் விடியலை நோக்கிய அவர்களின் பாதை இன்றும் இருளாகவே இருக்கின்றது. கண்ணீர் நிறைந்த அவர்களின் போராட்டத்தில் என்றென்றுமே தோல்வியை மட்டும் தான் சந்திக்கின்றார்கள் என்றால், அதற்கான காரணங்களில் நாமும் பங்குதாரர்கள் என்பதை அனைவருமே ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

இன்னும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் தம் பசியை போக்குவதற்காக, தம் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு வினாடியும் போராடிய வண்ணம் தான் இருக்கின்றனர். இப்படிப்பட்ட விளிம்பு நிலை மனிதர்களின் முகங்களும் ஆடைகளும் இன்னும் அவர்களின் முழு தோற்றமும் எப்போதும் ஓர் ஏக்கத்தோடு தான் இருந்து வருகின்றது. இன்னும் பல பாரங்களையும் துயரங்களையும் சுமந்தவாறு தங்கள் வாழ்விற்கான ஒரு விடியல் எப்போது என்ற தவிப்பை வெளிப்படுத்தியவர்களாகவே வாழ்க்கை எனும் நீரோட்டத்தில் நீந்திக் கொண்டிருக்கன்றனர்.

மேலும் இத்தகைய மனிதர்கள் செத்துப் பிழைத்து நொந்து நூலாகி பஞ்சத்தில் பரிதவித்து, சொல்ல முடியாத சோகங்களோடும் கஷ்டங்களோடும் வடுக்களோடும் தம் வாழ்நாளை கழித்துக் கொண்டிருக்கிறனர். இந்த அநீதியான வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற நகர்ப்புற விளிம்பு நிலை மனிதர்கள் இக் கணப் பொழுது கூட விடியல் வந்து விடாதா என்ற எதிர்பார்ப்போடும் யாரும் எங்களது கண்ணீரைத் துடைக்க மாட்டார்களா என்ற நீண்ட நாள் அவாவோடும் தான் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.



# உறவுகளை பேணுவோம்

தெரியாதவர்களுடன் உறவாடும்
இளைஞர்கள்
பெற்றோரை உறவாக எண்ணுவதில்லை.....
தொலைவிலுள்ள உறவை தேடும் சமூகம்
அருகிலுள்ள உறவை
அரவணைப்பதில்லை.....

தோல்விகளில் தோள் கொடுக்க வேண்டிய
உறவுகள்
தோல்வியை கண்டாலே விட்டுச்
செல்கின்றது.....
பாசத்தால் சேரும் உறவுகள்
பணப் பிரச்சினையால் உடைகின்றது....

தொலைப்பேசியை பார்க்க நேரம்
ஒதுக்குவோர்
தன்னை நேசிக்கும் உறவிற்கு நேரம்
ஒதுக்குவதில்லை....
நண்பர்களுடன் அரட்டையடிக்கும்
இளைஞர்களுக்கு
நம்பிவரும் உறவுகளின் மனம்
புரிவதில்லை....

உறவுகள் தொலையக்கூடாது என
தேடிச்சென்றனர் மூதாதையர்...
தேடி வரும் உறவையும்
தொல்லையாக நினைப்போர் நாம்.....
உறவுகளை மதிப்போம்..
ஒற்றுமையை வளர்ப்போம்....

கவிக்குரல் ஆயிஷா அனஸ்.









# பேரன்பு திரை விமர்சனம்

எஸ்.கிறிஸ்டீனா
யாழ் பல்கலைக்கழகம் - கலை பீடம்
ஊடகக் கல்வித் துறை

பொருளாதார தேவையை நிறைவேற்றும் நோக்கோடு இந்திய சினிமாக்கள் வலம் வந்து கொண்டிருக்கின்ற போதிலும் அதையும் தாண்டி வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் அடிப்படையாகக் கொண்டு மிகச்சிறந்த படைப்பாக 2018 ஆம் ஆண்டிலே வெளிவந்த படமாக பேரன்பு திரைப்படம் காணப்படுகின்றது. ராம் இயக்கத்தில் பி.எல் தேனப்பன் தயாரிப்பில் வெளிவந்த இத்திரைப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். தேனி ஈஸ்வரர் இத்திரைப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளளார். யதார்த்த வாழ்க்கையில் நடைபெறுகின்ற விடயங்களை வைத்து இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்தில் சாதனா( பாப்பா) மம்முட்டியின் (அமுதன்) மகளாகவும் அஞ்சலி சாதனாவின் தாயாகவும் நடித்துள்ளனர். கேரளத்தை சேர்ந்த திருநங்கை அஞ்சலி அமீர் முதன் முதலில் அறிமுகமாகியுள்ளார். இத்திரைப்படம் பல சர்வதேச விழாக்களில் திரையிடப்பட்டதோடு பல விருதுகளையும் பெற்றது. அமுதனின் மனைவி பிரிந்து சென்ற போது அந்த முடக்குவாதமுற்ற மகளை வளர்க்க வேண்டிய சூழ்நிலை அமுதனுக்கு வருகிறது. "நீங்கள் எவ்வளவு நல்ல ஆசிர்வதிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள் என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை தேர்ந்தெடுத்து இந்த கதையை எழுதுகின்றேன் என்னும் அமுதனின் வசனத்தோடு இத்திரைப்படம் ஆரம்பமாகிறது.

இயற்கையின் குணங்களை பன்னிரெண்டு அத்தியாயமாக பிரித்து கதை சொல்லும் பாணியில் இத்திரைப்படம் நகர்கின்றது. சென்னையில் தனது மகளுடன் குருவி சாகாத இடமாக இருக்க வேண்டும் என்று கொடைக்கானலுக்கு தனது மகளான பாப்பாவை கூட்டிக்கொண்டு வருகின்றார். அழகு நிறைந்த நீர்நிலைகள், வயல்வெளி, மரவீடு, பறவைகளின் சத்தம் எனும் சூழல் மனதிற்கு மகிழ்ச்சியை தருவதாக அமைகின்றது. தனது மகளை பார்த்துக்கொள்ள வேலைக்கார பெண்ணை தேடும் போது மகளை பார்த்துக்கொள்ள வருபவர்கள் சிறிது காலத்திற்கு மட்டுமே உதவியாக இருக்கின்றனர்.பின்னர் அமுதனே தனது மகளிற்கு தாயாகவும் தந்தையாகவும் இருக்கவேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. மகளிற்கு தனது அன்பை புரிய வைக்க அமுதன் படும் போராட்டங்களை சொல்ல வார்த்தை இல்லை. திரைப்படம் முழுவதும் முடக்குவாதமுற்ற பெண்ணாக நடிப்பது இலகுவான காரியம் இல்லை இருப்பினும் சாதனா (பாப்பா) தனது நடிப்பின் மூலம் தனது பாத்திரத்திற்கு புத்துயிர் அளித்திருப்பது சிறப்பானதொரு விடயம் ஆகும்.




இயற்கையின் குணங்களை மனித வாழ்க்கையோடு ஒப்பிட்டு கதை நகர்ந்து செல்கின்றது. திரைப்படத்திற்கு தேவையான இடங்களில் மாத்திரம் மென்மையான மற்றும் ஆக்ரோசமான இசையை வழங்கியுள்ளார் இசையமைப்பாளர். அமுதன் தனது மகளான பாப்பாவிற்கு தனது அன்பை புரிய வைப்பதற்கு குறும்புகளை செய்யும் போது பயன்டுத்தப்பட்ட Reverse shot மிகவும் அருமையாக இருந்தது. பாப்பாவின் முகத்தை உணர்ச்சிபூர்வமாக காட்ட Extreme close-up shot சிறப்பாக இருந்தது. மேலும் Close up shot, Two shot, Medium shot, Long shot என பொருத்தமான இடங்களில் பயன்படுத்தபட்டதோடு உணர்வுகளை சிறப்பாக காட்ட முடிந்தது. Editing colour creating சிறப்பாக இருந்தது.

"பூனைக்குட்டிக்கு எப்படி தான் அம்மாவின் உணவாக போகிறோம் என்பது புரியாதோ" போன்ற வசனங்களும் சிறப்பானவை. "செத்துப்போச்சு மனசு எனும் பாடல் நெஞ்சை உருகவைப்பதாக உள்ளது.

ஆரம்பத்தில் திருநங்கையான மீராவை பாலியல் தொழில் செய்பவராக சித்தரித்திருந்ததை தவிர்த்திருக்கலாம், மிகவும் அமைதியாக திரைப்படம் நகர்வதை குறைத்திருக்கலாம், வில்லன் பாத்திர நடிப்பை கூட்டியிருக்கலாம், விட்டுச்சென்ற மனைவியின் வாழ்வை துன்பங்கள் நிறைந்ததாக காட்டியிருக்கலாம். மேலும் பாப்பாவிற்கு தாயாவும் அமுதனிற்கு மனைவியாகவும் இயற்கை பேரன்பானது என்பதை திருநங்கை மூலம் காட்டியிருப்பது சிறப்பானது. ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் இந்த திரைப்படம் ஒரு பாடமாக இருக்கும் என்பது தெளிவாகிறது. வாழ்கை இப்படிப்பட்டது தான் என்பதை தத்துரூபமாக இத்திரைப்படம் எடுத்துக்காட்டுகின்றது Close ending ஆக இத்திரைப்படம் முடிவடைகின்றது.



# கல்வியின் சிறப்பு

காற்று இல்லை என்றால்
உயிர் இல்லை
கல்வி இல்லை என்றால்
வாழ்க்கை இல்லை !
கல்வி என்பது
மூன்றெழுத்துதான்
ஆனால் மனிதர்களின்
தலையெழுத்தை மாற்றும்
எழுத்து !
கல்வி எனும் அமிர்தம் நம்
வாழ்வை கற்பக விருட்சம்
போல் வளரச் செய்யுமே !
அள்ள அள்ள குறையாத
அட்சய பாத்திரம் தான்
கல்வி !
அறிவு எனும் பெட்டகத்தை
திறக்க உதவும் சாவி தான்
கல்வி !
ஏடுகள் பல புரட்டியதால்
வாழ்க்கையில் ஏற்றம்
தந்திடுமே கல்வி !
நாட்டின் மிகப் பெரிய
அரணே கல்வி !
அறிவு குணம் நல்ல
நடத்தையை
உருவாக்கிடுமே கல்வி !
அறியாமையை அகற்றி
அறிவைக் காட்டும் அற்புத
விளக்கு தான் கல்வி !
கல்வி கற்பது தவம்
அதை கற்பிப்பது வரம்
யார் கைவிட்டாலும் கற்ற
கல்வி கைவிடாது
உன்னை !!!

சியனுதீன் ஸபா



# இதயத்தில் நீ...!

எம்.லீலா வினோதினி
அரனாயக இலங்கை

நேரம் மதியம் 1.00 மணி. அந்தப் பிரபல்யமான வைத்தியசாலையின் இதய சத்திர சிகிச்சை மருத்துவரான ஆதிகேசவன் தனது ஓய்வறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான்.

திடீரென ஏதோ நினைவலைகள் மனதில் திரைப்படமாய் ஓட அவசரமாய் எழுந்து ஜன்னலின் திரைச்சீலையை அகற்றினான். ஐந்தாம் மாடியில் இருக்கும் ஓய்வறையில் இருந்து பார்த்தால் தெருவில் நடக்கும் அனைத்து சம்பவங்களுக்கும் புலப்படும். அவனின் விழிகள் ஆவலோடு எதிர்பார்ப்போடு யாரையோ தேடிக் கொண்டிருந்தன.

அவன் தேடியது வேறு யாரையுமல்ல, ஐந்து வயதான தேவதையை. பாலர் பாடசாலைக்கு உரித்தான ஆடை அணிந்து புத்தகப்பை சுமந்து நின்றாள். கன்னக்குழி விழ அழகாய் புன்முறுவலுடன், குறுகுறுப் பார்வையுடன் அச்சிறு தேவதை மகிழுந்துக்காய் தோழிகளோடு காத்திருந்தாள். ஒவ்வொரு நாளும் அங்கு வந்து நிற்கும் தேவதையை இரசிக்க ஆதி தவறியதில்லை.

குழந்தைகள் என்றாலே எல்லோருக்கும் பிடிக்கும். அவனுக்கும் குழந்தைகள் என்றாலே கொள்ளைப் பிரியம். ஜன்னலின் வழியே வைத்த கண்வாங்காமல் அந்த தேவதையை பார்த்துக் கொண்டிருந்த வேளையில் ஆதியின் தோளை ஒரு கரம் தட்டியது. திரும்பி பார்த்தான்.அங்கே அவனுடைய தோழன் சக்தி புன்னகையோடு "என்னடா ஆதி,யாரையும் நீ விரும்புகிறாயா? பாதையை பார்த்துக்கொண்டு கனவில் மிதக்கிறாய்" என்றான்.

" போடா. 35 வயதில் தான் எனக்கு காதல் வருமா? என்ன விடயம் சக்தி ...றொம்ப ஆனந்தமாய் இருக்கிறாய்?" "இன்று அப்பாவின் பிறந்த நாள். நீ கட்டாயம் வரவேண்டும். அப்பா உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்" வருகிறேன் என்று தலையசைத்து அவனை வழியனுப்பி விட்டு பாதையை பார்த்தான். அவனுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. காரணம் மகிழுந்து அந்த தேவதையை ஏற்றிச் சென்றுவிட்டதால்.

ஆதி வைத்தியசாலையில் வேலைகளை முடித்து விட்டு காரில் ஏறும் போது மாலை 6.00 ஆகிவிட்டது. சக்தியின் வீட்டுக்கு போகும் பாதையில் காரைச் செலுத்தினான். அப்பாதையில் அவ்வளவு வாகன நெரிசல் இல்லாதது இதமான பயண உணர்வை கொடுத்தாலும் அவனின் உள்ளமோ ஏதோ ஒன்றை எண்ணி தவித்தது. சக்தியிடம் என் வாழ்வின் கடந்த கால சம்பவங்களை கூறினால் மனதுக்கு ஆறுதல் கிடைக்குமென்று என்னியவாறு சென்றவனின் விழிகளோ வியப்பில் விரிந்தது.

அங்கே அவன் மனதை கொள்ளை கொண்ட தேவதை பாதையை கடக்க எத்தனித்துக் கொண்டிருந்தாள். தேவதையோடு பேசும் நோக்கத்தோடு தன் வாகனத்தின் வேகத்தை குறைத்தான். ஆதி. அந்த நொடி எங்கிருந்தோ அசுர வேகத்தில் வந்த வேன் அந்த தேவதையை மோதிவிட்டு நிற்காமல் மாயமாகி போனது.



ஆதியோ அதிர்ச்சியோடு காரை நிறுத்திவிட்டு ஓடிச்சென்று தேவதையை தூக்கினான்.தலை அடிப்பட்டதால் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றான்.

குழந்தையின் பெற்றோர் யார்,அவர்களை எவ்வாறு தொடர்பு கொள்வதென எனப் பற்பல கேள்விகளோடும், கவலைகளோடும் அந்த தேவதையின் சிகிச்சையை தொடங்கி ஆபத்தான கட்டத்தில் இருந்து மீட்டு விட்டான். அனைத்து வேலையையும் முடித்து சோர்வோடு வெளியே வந்து இருக்கையில் அமர்ந்தான்..

அப்பொழுது ஒரு பெண் அழுதபடி ஓடிவந்து அங்கிருந்த தாதியிடம் " என் குழந்தைக்கு அடிபட்டு இங்கே அழைத்து வந்தார்களாம்.அவளை நான் பார்க்க வேண்டும் என" கதறியபடி கேட்டாள். அந்த பெண்ணை கண்ட அடுத்த நொடியே "நிலா" என இதழ்கள் உச்சரித்தது.நிலா...யாரோ ஒரு பெண்ணல்ல அவரது தாரம்" அப்படியென்றால் இங்கே அடிபட்டு கிடப்பது என் குழந்தையா?" என ஏக்கம் கலந்த வேதனையோடு செய்வதறியாது தடுமாறி போனான். நிலாவிடம் போய் ஆறுதல் கூறலாமா? கூறினால் ஏற்றுக் கொள்வாளா என நினைத்தவாறே விழிகளை மூடினான் ஆதி. அவள் பழைய நிலாவாக இன்னும் இருக்கிறாளோ? இல்லை மாறிவிட்டாளோ?

நிலா தன் இருகரங்களாலும் முகத்தை மூடியவாறு அழுது கொண்டிருந்தாள். ஆதியின் உள்ளம் சத்தமின்றி வலித்தது. வேதனைகளை மறக்க அழுகை ஒன்று தானே மருந்து. நன்றாக அழட்டும் என்று தன் உள்ளத்தை ஆறுதல் படுத்தி அப்படியே இருவிழிகளையும் மூடிக்கொண்டான்.

எல்லாம் காலம் செய்த விதியென்று நினைத்தான். பெற்றோரை இழந்து அநாதை எனும் பெயரை தாங்கி பல துயரங்கள், தடைகள் தாண்டி படித்து மருத்துவர் பட்டம் பெற்று நிறைவாக வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் அவனது வாழ்வை இன்னும் வசந்தமாக்கவே வந்தவள் தான் நிலாஷினி. இருவரினதும் காதல் பந்தம் அழகாய் பயணித்துக் கொண்டிருந்த நிலாவின் பெற்றோர் அவளுக்கு வரன் தேடினர்.இதை அறிந்து தன் பெற்றோரிடம் தன்காதல் விவகாரத்தை கூறி சம்மந்தம் பெற்று பெற்றோரின் ஆசியோடு திருமணம் இனிதே நடைப்பெற்றது.

இல்லறம் ...அழகாய் தொடர! இன்பம் துன்பம் கலந்த வாழ்வாய் நகர்ந்தது. நாட்கள் விரைய இயல்புநிலை மாற தொடங்கியது.

எல்லாமே தன் ஆசைப்படி நடக்க வேண்டும் என்ற பிடிவாதம் அவளின் குணங்களில் ஒன்று.கணவனின் விருப்பு வெறுப்பு மீது அக்கறை கொள்வதில்லை. இதனால் இருவருக்கும் இடையில் சண்டைகள் வருவது வழக்கமானது. அன்று ஆதி மருத்துவ கருத்தரங்கம் ஒன்றுக்காய் வெளியூர் செல்ல ஆயத்தமாகி கொண்டிருந்தான்.நிலாவுக்கு அப்பயணம் மீது உடன்பாடில்லை.அதனால் சண்டை பெரிதாகியது. பொறுமையிழந்தான் ஆதி... பளார்... வலது பக்க கன்னத்தை உள்ளங்கையால் மூடியப்படி மௌனமா கண்ணீர் சிந்தியவாறே " இனி உங்கள் முன்னே வர மாட்டேன் " எனக் கூறி பிறந்த வீட்டுக்கு சென்றுவிட்டாள்.

தனிமையும் துயரமும் அவனை வாட்டியது,நிலாவை சமாதானப்படுத்தி அழைத்து வர மாமனார் வீட்டுக்கு சென்றான். அங்கே நிலாவின் பெற்றோரோ மருமகன் என்று பாராமல் இழிவாய் பேச அதை வேடிக்கை பார்த்தபடி நின்றாள் நிலா.மாமனார் மாமியார் சுடும் வார்த்தைகளை விட நிலாவின் மௌனம் அவனை உயிரோடு கொன்றது.

அதன் பின்னர் அவனுக்கு அந்த ஊரில் வாழ விருப்பமில்லை. அதனால் அவன் வேறு வைத்தியசாலைக்கு இடம் மாற்றம் பெற்று சென்றான். பத்து வருடங்களாக இருவரும் ஒருமுறையாவது சந்தித்துக் கொள்ளவில்லை. "ஆதி" என யாரோ அழைக்கும் குரல் செவியை அடைய மெல்ல விழிகளை திறந்து திரும்பிய போது " அந்த குழந்தைக்கு நினைவு திரும்பி விட்டது. பெற்றோர் வந்தால் அழைத்து போக கூறுங்கள் " என்று சக மருத்துவர் கூறி சென்றார்.

வானதி இருந்த பக்கம் திரும்பி பார்த்தான் அவளோ சோகமாய் சோபையிழந்து சுவரில் சாய்ந்து கண்ணயர்ந்து கிடந்தாள். அவளின் நித்திரையை கலைக்காது குழந்தைக்கு தேவையான பொருட்கள் மற்றும் உணவை வாங்கி வந்தான் ஆதி. சற்று பயம் கலந்த தயக்கத்தோடு நிலாவின் அருகே சென்றான். "நிலாம்மா...!" திடுக்கிட்டு எழுந்த நிலாவின் வதனம், சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்தது. உடனே அவனை கட்டியணைந்து கதறி அழுதாள்." எங்க குழந்தையை வேனொன்று மோதி விட்டு போய்விட்டதாம்...இப்ப அவள்..." அதிக சந்தோஷமும் அதீத வேதனையிலும் தோய்ந்த விழிகளில் கண்ணீர் அருவியாய் வழிய,

"எங்க குழந்தைக்கு பெரிய காயம் எதுவும் இல்லே. இப்போதான் மருத்துவர் கூறி சென்றார்"என கூறினான் ஆதி.

பின்னர் அவனை விட்டு விலகிய நிலா தலைகுனிந்தவாரே "என்னை தயவுசெய்து மன்னித்து விடுங்கள், சின்ன விடயங்களை பெரிதுப்படுத்தி பிடிவாதம் பிடித்தது என் தப்பு. பெண்ணுக்கு பொறுமை இருக்க வேண்டும். என் பிடிவாத குணத்தால் உங்க நல்ல குணத்தையோ மனதையோ புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேன்" என்றாள் கண்ணீரோடு.

ஆதி தன் அன்பு மனைவியின் கண்ணீரை துடைத்தவாறே, "முதலில் குழந்தையை போய் பார்ப்போம் ...வா!" என்று அவளை அழை(ணை)த்துச் சென்றான்.



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 27 | 28 பெப்ரவரி 2023




# புஹாரி நளீர்
## எழுத்தாளர், நடிகர் அவர்களுடனான நேர்காணல்

### உங்களை பற்றிய ஒரு அறிமுகத்தை தாருங்கள்?

நான் சேது முஹம்மது புகாரி, மர்சுக்கா பீவி ஆகியோரின் புதல்வான் புகாரி நளிர் மூதுரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவன், தற்பொழுது திரைப்பட இயக்குனர் மற்றும் கதை ஆசிரியர், எழுத்தாளர், நடிகராக வளம் வருகின்றேன்

### உங்களுடைய கல்வி பின்புலம் எவ்வாறானது?

தி/மூ /அல்ஹிலால் மத்திய கல்லூரியில் ஒன்று தொடக்கம் 13 வரை கல்வி கற்றேன், QS, மற்றும் diploma in mass media படித்துள்ளேன்.

### கலைப்பயணத்தை தொடர முன் உங்களுடைய வாழ்க்கை எவ்வாறு இருந்தது?

T. O ஆகவும் இரண்டு வருட காலம் பணியாற்றி உள்ளேன் VKC sleeper India கம்பெனி இல் வட கிழக்கு மாகாணங்களுக்கு manager ஆக கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

### கலைத்துறையில் ஈடுபாடு ஏற்படுவதற்கான உந்துதலாக அமையப்பெற்றது எது?

கற்பனை திறமை மற்றும் கதை திரைக்கதை எழுதும் ஆர்வம், சமூக சிந்தனை என்பன உண்மையற்ற மீடியா பதிவுகள், என்னுடைய பாட்டனார் உமர் நைனா புலவர் இவர் இலங்கையில் பிரசித்தி பெற்ற புலவர் அவருடைய ஆளுமையும் எனக்கு உண்டு அதனை வெளிக்கொண்டு வரவே மீடியாவை தெரிவு செய்தேன் முக்கியமாக எனது கல்வியில் நடந்த சம்பவங்களை கூறுவதாக இருந்தால் ஊடகத்துறையில் சாதிக்க வேண்டும் அதனூடாக எனக்கு நடந்த அந்தக் கல்வி பின்புலத்தை உலகம் அறிய ஊடகத்துறையில் கூற வேண்டும்.

### கலைத்துறையில் தற்பொழுது என்னவாக செயல்படுகின்றீர்கள்?

கதை, திரைக்கதை, பாடல் வரிகள், இயக்கம், தயாரிப்பு என்பன இன்னும்.

**இயக்குனர் என்பதை தாண்டி நீங்கள் வேறு எந்த துறைகளில் திறமையானவர்?**

விளையாட்டு, பேச்சாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், நிறுவனங்கள் சங்கங்களுக்கு யாப்பு எழுதல் மற்றும் ஆலோசகராக செயல்படுகின்றேன், ஊடகவியலாளர் ஆக பணியாற்றுகின்றேன்.

**வாய்ப்புகள் கிடைப்பது என்பது மிகவும் கடினமான ஒரு விடயம் அதேநேரம் கிடைத்த வாய்ப்புகளை தக்க வைத்துக் கொள்வது என்பது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல அந்த வகையில் கலைத்துறைக்குள் நீங்கள் முதலில் காலடி எடுத்து வைக்க அமையப்பெற்ற வாய்ப்பு எது?**

பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கலை துறையினை ஆரம்பித்தேன் சமூகத்தின் பிரச்சனைகளை மீடியா ஊடாக கொண்டு வர வேண்டும் என்பதற்காக சினிமாதுறையைத் தேர்ந்தெடுத்து. அதில் மாணவர்களின் அன்றாட பிரச்சினைகளையும் கொண்டு வருகின்ற போது பல சவால்களுக்கு எதிர்ப்புகளுக்கும் முகம் கொடுத்தேன்

**நீங்கள் ஒரு இயக்குனராக அடையாளப்படுத்தப்பட்ட அந்தத் தருணம் பற்றி கூறுங்கள்?**

எனது முதலாவது குறுந்திரைப்பிடம் 30 ரூபாய் தேசிய ரீதியில் என்னை இயக்குனராக அடையாளப்படுத்தியது எல்லையற்ற மகிழ்ச்சியும் உலக அளவில் எளிதாக சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் ஊட்டியது

**நீங்கள் பிறந்து வளர்ந்து கல்வி கற்ற உங்களுடைய பிரதேசத்தில் உங்களுக்கான வரவேற்பு எவ்வாறு இருக்கின்றது?**

உண்மையிலேயே பாடசாலை ரீதியான கருத்தினை நான் குறுந்திரைப்படமாக சமூகத்துக்கு வெளிப்படுத்தினேன் சமூக ரீதியான ஒத்துழைப்பும் பாடசாலை ரீதியான ஒத்துழைப்பும் தனிப்பட்ட ரீதியில் பெரிதாகவும் குழுவாக மிகவும் குறுகியதாகவே காணப்படுகிறது

**ஒவ்வொருவருடைய வெற்றிக்குப் பின்னும் தாய் தந்தை நண்பர்கள் ஆசிரியர்கள் என யாரோ**



**ஒரு நபர் இருப்பார் அவ்வாறு நீங்கள் ஒரு இயக்குனராக உங்களுக்கு துணையாக நின்றவர்கள் யார்?**

என்னுடன் 30 ருபாய் திரைப்படத்தில் பணியாற்றிய கலைஞர்களை கூறலாம் எனது தாய் மற்றும் துணைவி மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஐ. எம். நஹ்பிஸ், படப்பிடிப்பு காதர் முகைதீன் பாரிஸ், எடிட்டர் முஹம்மட் அஹ்ஷன், மற்றும் நடிகர்கள் நடிகைகள் பெயர் குறிப்பிட முடியாத ஒரு நபர் குறிப்பிட்டு கூற முடியும்

**ஒரு இயக்குனர் என்ற வகையில் சமூகத்துக்கு எவ்வாறான தொணிப்பொருளில் கதைகளை கொண்டு செல்ல முயல்கின்றீர்கள்?**

பாடசாலை கல்வி, போதைப்பொருள், போதை வஸ்து பாவனை, சமூக எழுச்சி, குற்றவியல், அரசியல், நற்சிந்தனை இன்னும் ஏராளமான விடயங்கள்

**நீங்கள் இயக்கிய குறுந்திரைப்படங்கள் பற்றி கூறுங்கள்?**

ஒரு நாட்கள் இரு நாட்களுக்குள் குறும்படத்தை முடிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது நாம் எடுக்க நினைக்கின்ற கதாபாத்திரங்கள் காட்சி அமைப்பு காட்சிகள் 50% ஆகவே அமைய பெரும் காரணம் இருக்கின்ற பொருளாதார நிலைமை மற்றும் சினிமா துறையில் இருக்கின்ற பற்று உண்மைத் தன்மை எல்லோரிடமும் காணப்படாமை ஒவ்வொரு குறும் திரைப்படத்தில் படத்திலும் ஒவ்வொரு விதமான அனுபவத்தை கற்றுக் கொண்டேன்



**இன்றைய காலகட்டத்தில் பலருக்கு பல திறமைகள் இருந்தாலும் கூட அதனை வெளிக்கொண்டு வருவதற்கு வளங்கள் இல்லாததால் அவை முடங்கிப் போகின்றன, ஒரு குறும் திரைப்படம் ஆக இருந்தாலும் அதனை இயக்குவதற்குரிய வளங்கள் தேவை எவ்வாறான வழிகளில் அவற்றைப் பெற்றுக் கொள்கின்றீர்கள்?**

முதல் இரண்டு குறுந்திரைப்படங்களையும் நானே தயாரித்திருந்தேன் பணத்தால் மட்டும் இதனை சாதித்து முடிக்க முடியாது நேர்மை உண்மை அனைத்தும் இருந்தால் மாத்திரமே சாதிக்க முடியும், வளங்கள் இருந்தால் இந்தியாவுக்கு நிகரான திரைப்படங்களை வழங்க முடியும் என்னால்

**கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த அங்கீகாரங்கள் எவை?**

இதுவரையில் பல அங்கீகாரங்கள் கிடைக்கப்பட்டு இருக்கிறது சிறந்த இயக்குனராக கலை முத்து பிரதேச இலக்கிய விழாவில் கௌரவிக்கப்பட்டேன்.
தேசிய ரீதியில் இயக்குனராகவும் ஒளிப்பதிவாளர் கௌரவிக்கப்பட்டுள்ளேன் இன்னும் பல விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளேன்

**நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி கூறுங்கள்?**

சிறந்த இயக்குனருக்கான விருது
குறுந்திரைப்பட கலைஞருக்கான விருது
ஒளிப்பதிப்புக்கான விருது
சிறந்த குறுந் திரைப்படத்திற்கான விருது

**இவ்வளவு தூரம் ஒரு கலை பயணத்தை மேற்கொள்ளும் போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?**

நம்மோடு உறவாடிக் கொண்டிருக்கின்ற, வேலை செய்து கொண்டிருக்கின்ற, நண்பர்கள், உதவியாளர்கள், ஒருவன் முன்னேறுவதை விரும்பாத நபர்களை, கடந்து செல்வது ஒரு சவாலாக இருக்கும்

**எதிர்காலத்தில் எவ்வாறான விடயங்களை உங்களுடைய திரைப்படங்கள் மூலமாக வெளிக் கொண்டு வருவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றீர்கள்?**

சமூகத்தில் இருக்கின்ற மூடநம்பிக்கைகளை அகற்றி நல்ல சிந்தனைகள், ஆரோக்கியமான வாழ்க்கை, போதைப் பொருள் பாவனை அதன் சீர்கேடுகள், அரசியல், பண



மோசடி, துஷ்பிரயோகங்கள், தற்கொலை போன்ற விடயங்களை முற்றாக ஒழிப்பதற்கு எனது திரைப்படம் சான்றாக இருக்கும்

**உங்களுடன் இயங்குவதற்கான கலைஞர்களை எவ்வாறு தெரிவு செய்கின்றீர்கள்?**

இதுவரையில் ஊடகங்கள் மூலமாக, தெரிந்தவர்கள் என தெரிவு செய்கிறேன் என் திரைப்படத்தில் நடிக்க விரும்புபவர்கள் 0779323456 இலக்கத்துக்கும் யேடநநச என்னும் முகநூல் மூலமும் தொடர்பு கொள்ள முடியும். UAN production மூலம் எமது திரைப்படத்தை பார்வை இட முடியும்

**உங்களைப் போன்ற இளம் கலைஞர்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஒரு அனுபவரீதியான பகிர்வு என்ன?**

கலைத்திறமை மதித்து அதில் உண்மையாக இருக்க வேண்டும் நம்பிக்கை உடன் செயல்பட வேண்டும் சமூக சீர்கேடில் இருந்து முதலில் நாமும் நமது சமூகத்தையும் காப்பாற்ற கலைத்திறமையை பயன்படுத்த வேண்டும்

**கலை என்று வரும் போது எங்களுடைய அயல் நாட்டுடன் நிச்சயமாக தொடர்பு இருக்கும் அந்த வகையில் இந்திய கலைஞர்களுடனான உங்களுடைய தொடர்பு எவ்வாறானது? அவர்கள் மூலம் உங்களுக்கான உதவிகள் அல்லது பங்களிப்புகள் இருக்கின்றதா?**

இருக்கிறது ஆனால் அதனை கைகோர்த்து நட்போடு செல்ல சில மாத காலம் எடுக்கும்

**பல தடங்கல்களைத் தாண்டி இன்று ஒரு இயக்குனராக அறிமுகமாகி இருக்கின்றீர்கள் உங்களுடைய இறுதி இலக்கு என்ன?**

சிறந்த இயக்குனராக இந்தியாவில்,உலக அளவில் இயக்குனராக வலம் வர வேண்டும்

**இளம் ஆளுமைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஸ்கை தமிழ் ஊடகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றிய உங்களுடைய கருத்தை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?**

இது போன்ற இளம் இயக்குனர்களை அடையாளம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்தும் ஊடகமாகவும் இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன் ஒருவருடைய வளர்ச்சியிலும் உங்களுடைய பங்கும் இருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்காது ஸ்கை தமிழ் ஊடகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை உலகில் இருக்கின்ற தமிழ் பேசுகின்ற அனைவருக்கும் போய் சேர வேண்டும் போய் சேரும் என்பதில் ஐயமில்லை எனக்கும் வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி மகிழ்ச்சி அடைகின்றேன்









# போதைப்பொருள் பாவனையும் அதன் விளைவும்

எம்.என்.பாத்திமா நுஹா

இன்றைய சமுதாயத்திற்கு ஆரோக்கியத்திற்கு எதிராக உலகளவில் எழுந்திருக்கும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று போதைப்பொருள் பாவனை. பொழுதுபோக்கிற்காகவும் சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்திற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான போதைப்பொருட்களுக்கு உதாரணமாக மதுபான வகைகள், புகையிலை, கஞ்சா, அபின் போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றுள் மதுபானம் அனைவராலும் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது. இந்த போதைப்பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவித்து உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதோடு சமூகத்தில் பல சீர் கேடுகளையும் தோற்றுவிக்கின்றன. போதையானது தன்னிலை மறக்க செய்யும் ஓர் செயற்பாடாக இருக்கின்றது. இப் பாவனைப் பொருட்களை பயன்படுத்தும் போது அவற்றிக்கு அடிமையாகி நாளடைவில் அவை இன்றி வாழ முடியாத நிலையை உருவாக்கும்.

இப் பாவனையானது தனி மனித சீரழிவு வன்முறையான குடும்ப அமைப்பு மற்றும் பல்வேறு வகையான உயிரை குடிக்கும் நோய்களுக்கும் வழிவகுக்கின்றன. இப்பழக்கம் உள்ளவர்களிடையில் பால் வினை நோய்கள் அதிகமாக காணப்படும். போதை பால் வினை நாட்டத்தை குறைத்து ஆண்மையிழப்பை உருவாக்கும். போதைப்பொருட்கள் பயன்படுத்தும் பெண்களுக்கு கருமுட்டை உற்பத்திகள் குறையும் அது மட்டுமின்றி மாத விலக்குப் சுழற்சி அசாதாரண நிலையில் காணப்படும். நாளடைவில் குழந்தை பாக்கியம் இல்லாமல் மலட்டு தன்மை அதிகரிக்கும். இப்பழக்கம் குடும்ப நபரிடம் காணப்படும் போது அக் குடும்பமே சீரழிவிற்கு உள்ளாகின்றது. அக் குடும்பத்தில் சிறு பிள்ளைகள் இருக்கும் போது இதனால் அவர்களின் கல்வி வாழ்க்கை பாதிப்படையும் அது மட்டுமின்றி அவர்களின் இயல்பு வாழ்க்கை அன்றாட தேவைகள் போன்றவைகளுக்கு சீரழிவுகள் ஏற்படும் இன்னும் ஒருவரின் பாவனையை பார்த்து இன்னொருவர் பழகி இவ்வாறு ஒரு சங்கிலி போன்ற அமைப்பில் பரவலாக இப் பழக்கம் விரிவடையும்.

இப் பழக்கம் உள்ளவர்களை சமூகத்திலும் வீட்டிலும் மதிக்க மாட்டார்கள். நாளாடைவில் தங்களுடைய செல்வச் செழிப்பை இழந்து மிகவும் வறுமை அடைந்து கொள்வர்கள். இன்னும் போதைப்பொருட்களை பெற்றுக் கொள்ள பணம் இல்லாத போது கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற நாச காரியங்களுக்கும் சமுகத்தில் ஏற்படும் இதனால் அவர்கள் மட்டுமின்றி முழு சமுதாயமும் பாதிப்படைகின்றது.

பள்ளி பருவத்தில் நட்பு வட்டாரத்தினர் கொடுக்கும் அழுத்தம், வாழும் சூழல், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் திரைப்பிரபலங்கள் போன்றவர்களைப் பார்த்தும் பழகுதல் மற்றும் சுய விருப்பம் தற்காலிக மகிழ்ச்சிக்காக மற்றும் சிலரின் தவறான நட்பு போன்ற பல காரணங்களில் போதைப் பழக்கம் ஏற்படுகிறது. இருந்தும் இதற்கெல்லாம் முதற்காரணமாக போதை பொருட்கள் கிடைப்பதை மட்டுப்படுத்தினால் மாத்திரமே போதையற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.

போதை பாவனையை ஒழித்து வீட்டையும் நாட்டையும் போதை பாவனை அற்ற ஒரு ஆரோக்கியமான முறையில் காப்பாற்றி எதிர் காலத்தையும் காப்பற்ற முயற்சி செய்வோம்...







# என் எழுத்துக்கு ஒரு தசாப்தம்

## நூல் வெளியீட்டு விழாவும் நூல் விமர்சனமும்

லுதுபியா லுக்மான்

பயாஸா பாஸில் எழுதிய "என் எழுத்துக்கு ஒரு தசாப்தம்" கவிதை நூலானது பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி 2023 அன்று ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் வெளியீட்டில் zoom தொழில் நுட்பம் ஊடாக மிகவும் சிறப்பான முறையில் இரவு 7.00மணிக்கு நடைபெற்றது.

ஷிஹானா நௌபர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க மூத்த கவிஞர் நஜ்முல் ஹுசைனின் அவர்கள் தலைமை உரையினை நிகழ்த்தினார். பியாஸ் முஹம்மட் அவர்கள் ஆசிரியர் - நியூஸ் நொவ், மீள்பார்வை பத்திரிகை முன்னாள் ஆசிரியர் அழகான முறையில் நூலாசிரியரை அறிமுகம் செய்து வைக்க சிறப்பு அதிதியாக எம். எம். மொஹமட் இலங்கை தேர்தல் ஆணைக் குழு உறுப்பினர் மற்றும் எம். இஸட். அஹமட் முனவ்வர் சியன மீடியா தலைவர் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் சிறப்பிக்க பிரதம அதிதியாக மின்னும் தாரகை நூலாசிரியர் நூருல் ஐன் நஜ்முல் ஹுசைன் நூல் வெளியீட்டு விழா இனிய முறையில் நடத்திட தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

zoom இன் ஊடாக ஒரு நூல் வெளியீட்டு விழா எவ்வாறு சாத்தியம் ஆகும் என்பது எனது எண்ணங்களுக்குள் அடிக்கடி சிந்திக்கத்தூண்டிய ஒன்றாக இருந்தாலும் இன்றைய நம் நாட்டு நிலைமை காரணமாக இவ்வாறானதொரு வளர்ச்சி அடைந்த தொழில் நுட்பத்தின் மூலம் எழுத்தாளர்கள் பலரின் கனவுகள் மெய்ப்படுகின்றது என்பதை நினைக்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

என் எழுத்துக்கு ஒரு தசாப்தம் நூல் வெளியீட்டு விழாவிற்கு நாலா பக்கங்களில் இருந்தும் பல வாசிப்புப் பிரியர்கள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

பயாஸா பாஸில் தனது பத்து வருட எழுத்துப் பயணத்தை "என் எழுத்துக்கு ஒரு தசாப்தம்" எனும் கவிதை நூலின் மூலம் தனது அனுபவங்களை, வாழ்க்கையின் யதார்த்தத்தை மிக அழகாக தெளிவாக

யாவரும் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய எளிய மொழி நடையில் எழுதியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

முதற்கவிதையினை சமர்ப்பிக்கும் பொழுது தன்னைப் படைத்த நாயன் முதல் ஒவ்வொருவரையும் தன் வாழ்க்கைக்கு மூலகர்த்தாவானவர்களை நினைவு கூறும் விதம் உண்மையிலேயே அருமை.


பயாஸா பாஸில் சிறு வயதாக இருக்கும் பொழுதே தந்தை இவ்வுலகை விட்டுப் பிரிந்து இருந்தாலும் "நான் வளர வழிகாட்டி முளையும் பயிர் விளைய வித்திட்டுச் சென்ற என் தந்தைக்கு!" சமர்ப்பணம் சொல்லும் கவி நல்ல அர்த்தமான வரியாகும். நிச்சயமாக கவிஞரைப் பாராட்டியே ஆகவேண்டும்.

தன் தந்தையை இழந்த வலியை ஒரு சில கவிதைகளில் வரி வரியாய் வார்த்துள்ளார். வாழ்வை தந்தவன் எடுத்துக் கொண்டான் வாழ வந்த எமக்கு ஜீரணிப்பது கஷ்டம் . தந்தை இல்லாத வலியை கவிஞர் வாழ் நாள் முழுக்க சுமக்கின்றார் என்பதே உண்மை.

தந்தை பற்றி மட்டுமல்லாமல் தன் தாய் பற்றியும் அவர் எழுதாமலில்லை. எல்லோருக்கும் தாய் என்பவள் எவ்வளவு முக்கியமானவள் பயாஸா பாஸிலும் "நீயே என் ஒளி விளக்கு நான் வாழும் காலம் வரை!. என்ற வரிகளுக்குள் அவரின் மொத்த பிரகாசத்திற்கும் தாய் தான் காரணம் என்பதை அழகாக தொட்டுக்காட்டுகின்றார்.

பெண்ணே! எனும் கவிதை தாய்மையை மேன்மைப்படுத்தி தீன் பணிக்காக தன் பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திச் செல்கின்றது. சிறந்த கல்வி சீரான வளர்ப்பு எல்லாம் கொண்டு அழகாக வளர்க்கப்படுகின்றாய் நீ! அழைக்கின்றது தீன் எம்மை தீன் பணிக்காய் ..என்ற கவி வரிகளே அவை.

எனதான அவ்வூர் கவி வரிகள் அவர் பிறந்த ஊரின் அழகினை இவ்வாறு வர்ணிக்க "பாதையோரமெங்கும் பச்சை வயல் வயலின் நடுவே ஒற்றையடிப் பாலம் பாலம் கடந்த பாதை தாண்டின் அங்கே ஜும்மாப் பள்ளி அழகாய் வர்த்தைகளை அடுக்கிக் கொண்டு செல்ல பலவருடம் பின் அவரது ஊரின் மாற்றம் கண்டு வியந்து போகிறார் கவிஞர்.




கவிஞரின் வாழ்வு பற்றி மட்டுமல்லாது தூர தேசத்தில் நடக்கும் கொடுமைகள் கண்டு பேனா முனை கொண்டு எழுதுகிறார்.அய்லான் குர்தூபிக்காக வார்த்தைகள் முடியும் முன் வாயார கூறுகிறேன் சுவர்க்கத்து பூஞ்சோலை சுந்தரனே உனக்காய் வஞ்சமில்லா நெஞ்சத்தோடு வல்லவனிடம் கேட்கின்றேன் ! என்று அச்சிறுவனை தன் நெஞ்சமதில் நிலை நிறுத்துகின்றார்.

எப்போது மிருகமானாய் ?.. கவியின் வரிகள் எவ்வளவு ஆழமானது தெரியுமா? ஒரு குழந்தையை ஒரு தாய் தன் சிசுவை கருவறையில் எத்தனை கனவுகளாடு சுமந்திருப்பாள் என்பதை உணராத ஒரு பிள்ளையை நோக்கி கேட்கின்றார் கவிஞர். பெற்றவளின் பாசம் பெறவைத்தவனின் நேசம் எதையும் உன்னால் உணர முடியவில்லை. எங்கே தொலைந்தது உன் ஆறாம் அறிவு எனக் கேட்பதன் மூலம் மிருகத்தனமாய் மாறிய செயல் கண்டு கடும் கோபம் கொள்கின்றார்.

முடிவு உனிடமே எனும் கவியின் ஒவ்வொரு அடிகளின் ஆழமும் எம் அனைவரினதும் இதயங்களையும் தட்டி எழுப்பும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.




ஓடி ஓடி உழைப்பதில் மட்டும் பயனில்லை நன்மைகளையும் அதிகம் அதிகம் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. முடிவின்றி நாமும் ஓடுகின்றோம்,களைப்பின்றி தினமும் உழைக்கின்றோம். அடுத்து முடிவது எல்லாம் இறையோனே ..உன்னிடம் தானே மன்னவனே.. கையால் விட்ட தவறுகளோ கைசேதம் என்று விளங்கிடுமே..

நன்மை இன்றே செய்து விடில் நலமும் அன்றே கிடைத்துவிடும் ..இன்னும் ஏன் தாமதம் வாசகர்களே! நம் உழைப்பிற்கு மத்தியில் நன்மைகளை அதிகம் செய்திடுவோம். கவிஞரின் ஆசையும் அதுவே.! பிச்சையும் இச்சையும் கவிதை ஆசைக்கு அணியும் கிழிந்த ஆடையோடும் பிச்சைக்காரி அணியும் ஆடையோடும் ஒப்பிட்டு மிக அழகாக அந்த அநாகரீக ஆடையை எடுத்துக்காட்டுகின்றார்.

சிறைப்படுகின்றான் மனிதன், கவிதையில் இறைவனை மறந்து மனிதன் மொத்தமாய் சைத்தானிடம் சிறைப்பட்டதை மிகத்துள்ளியமாக எடுத்துக்காட்டுகின்றார்.

உனக்காக கண்ணீர் வடிக்கின்றேன் ! கவிதை சமூகம் சார்ந்த கவிதை தன் இயலாமையை எழுத்துக்களில் கோர்கிறார் கவியாக "துப்பக்கி ஏந்த முடியவில்லை துஆக்களை ஏந்துகின்றோம் என்று தன் பேனாவால் எழுதுகின்றார். இந்தப் பெண் ஆளுமை வாழ வேண்டிய வயதில் வாடிச் செல்லும் குழந்தைகள் காணச்சகிக்கவில்லை ரப்பே !. என்று தன் மனக்குமுறலை கொட்டுகின்றார். தோற்றுப்போகின்றேன் கவிதைக்குள் நுழைந்த பின் உண்மையிலேயே நாங்கள் தோற்றே போனோம் என்பதை உணர முடியும்.

மன்னிப்பழிக்காத சவூதிப் பெண்மணியின் குணத்தால் தாரை வார்க்கப்பட்ட தங்கப் புதையல் ரிஸானவைப்பற்றி வாழச் சென்ற வாழைக்கன்று சிறகடித்துப்பறந்த சிட்டுக்குருவி என்று மிக அழகாக அழைத்து அவளின் நிலைதனை வடித்து எம் இதயங்களையும் நிலை குலையச் செய்துவிட்டார் இக் கவிஞர். ஆங்காங்கே நடக்கும் சின்னஞ்சிறுசுகளின் கற்பழிப்பு கண்டு மனம் கொதித்தெழுந்து எழுதுகின்றார் . ஒவ்வொரு சிட்டுக்கள் பற்றியும் கண்ணீர் துளிகளை சாட்சியாக்கி எழுதித் தள்ளுகின்றேன்.. இருந்தும் என்ன பயன். எத்தனை முறை எழுதிட்டாலும் முறை தவறி நடக்கும் ஆண்களுக்கு தண்டனை ஏதும் இல்லையே.. என்பதே எனது கவலையும் கூட. கவிஞரும் இறைவனே தண்டனை கொடுக்க வல்லவன் என்று அவனிடமே மடல் அனுப்புகிறார்.

எம் கவிஞர் சமகாலப் பதிவை கருவாகக் கொண்டு கவி உருவாக்கி கலை படைத்துள்ளார். கொரோனா தந்த பாடம் கவிதையில் புது உலகில் கொரோனா எம்மை வாழவைத்த புதுமைகளை அடுக்கிக்கொண்டே போகின்றார். பாக்கியம் கவிதையில் பெற்றோரை கண்ணியப்படுத்தும் படி வழுக்கட்டாயமாக் கூறுகின்றார். உண்மையில் பெற்றோரை மதிக்காதோர் பின்னர் வேதனைப்படுவார்கள் ஏனென்றால் கவிஞர் சொல்வதைப்போல் அவர்களை கண்போல காக்கும் பாக்கியம் எல்லோருக்கும் அமைவதில்லை.

உள்ளத்திற்கு உரமாகும் எழுத்து கவிதையின் மூலம் நல்ல எழுத்து எம் உள்ளத்திற்கு உரமாகும் முன்னேற வாழ்வில் வெற்றி பெற வழியமைக்கும் .என்பதை முழு சமூகத்திற்கும் உரத்துக்கூறுகின்றார்.

பேனா முனையின் வலிமை எவ்வாறு எனில் நாம் எழுத எழுத ஒரு மனிதன் பூரண மனிதனாக பட்டை தீட்டப்படுகின்றான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கவிஞர் பயாஸா பாஸில் தன்னை ஒரு எழுத்தாளராக அடையாளப்படுத்துவதற்கு தனது கவிதைகளை துளித்துளியாக சேமித்து வரிவரியாக வார்த்து அத்தனையையும் கோர்த்து ஒரு தசாப்த காலமாய் பெரும்பாடு பட்டு தன் கடைசிக் கவியான தன் துணைவரின் துணையோடு "என் எழுத்துக்கு ஒரு

தசாப்தம் "நூலை வெளியீட்டுள்ளார். கவிஞர் பயாஸா பாஸிலின் ஆசையெல்லாம் தன்னை இந்த சமூகத்திற்கு ஒரு ஆலமரமாய் வளர வேண்டும் என்பதே ! பெருமைக்கோ பேராசைக்கோ அவர் எண்ணவில்லை. அடுத்தவர்களுக்கு பயனாக அமைய வேண்டும் என்பதற்காக அவர் காயங்களையும் காயப்பட்ட ரணங்களையும் அவர் உள்ளத்தில் உரமாக்கி கிளை பரப்பிடும் ஒரு மரமாய் வளர தளிராய் மீண்டு வந்தார் பயாஸா பாஸில் .

இவரைப் போல் தன் சமூகத்தில் பல முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் உருவாக வேண்டும். அவர்கள் வளர மூத்த எழுத்தாளர்கள் உரமாய் ஆழும் விழுதாய் திகழ வேண்டும்.

தன் கவிதைகளில் கவிஞர் கோர்க்கும் எதுகை மோனை ஆங்காங்கே அவரது கவி வரிகளை அழகுறச்செய்கின்றன. "கருவறையில் சுகம் ஜனனித்த நொடி தாயவளின் மடி தாலாட்டுக் கவி ". இக் கவி வரிகள் போல் மேலும் பல வரிகளை அழகுறச்செய்தது எதுகை மோனை. மேலும் புறம் பேசியவர்களையும் புன்னகை அணியவைத்தாய்.! மறையை நினைக்காதோரையும் மார்போடு அணைக்க வைத்தாய் இவ்வரிகளை அலங்கரித்த எதுகை மோனை என் இதயத்தை தொட்டுவிட்டது.

பயாஸா பாஸில் தன்னைப் பற்றி தன்னைச் சார்ந்தவர்கள் பற்றி சமூகத்தைப்பற்றி சமூகத்திற்கு அப்பால் அயல் நாட்டு சொந்தங்களைப் பற்றி நாட்டு மக்களின் பிரச்சினைகள் பற்றி மற்றும் பல பொதுப்பிரச்சினைகள் பற்றியெல்லாம் கவி வடித்துள்ளார்.

இவர் இஸ்லாமிய பெண் எழுத்தாளர் என்ற வகையில் இஸ்லாமிய கவி புனைவதிலும் ஆர்வம் காட்டியுள்ளார். சிறைப்படுகின்றான் மனிதன், என் சுவாசமே, முடிவு உன்னிடமே, பெண்ணே, இவ்வாறு பல கவிதைகள் எம் இஸ்லாமிய சமூகம் பற்றி அதிகமாய் சிந்திக்கின்ற ஒருவராய் இருக்கின்றார். எதிர்காலத்தில் பல இஸ்லாமிய மற்றும் சிறந்த கருத்துக்களைக் கொண்ட கவிதைகளைத் தருவார் என்று எதிர்பார்க்க முடிகின்றது.

இவர் இன்னும் அதிகமாக சமூகம் சார்ந்த கவிதைகளையும் எழுத வேண்டும் இவரைப் போன்ற பல முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் வளர்ந்து வரும் பெண் எழுத்தாளர்களை இனம் கண்டு வழி நடாத்திச் செல்ல வேண்டும்.இலை மறை காயாக இருக்கும் எழுத்தாளர்கள்



எந்தக் கயிற்றைப் பற்றிப் பிடிக்க வேண்டும் எனத் தெரியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கின்றவர்களை அவர்கள் கரைத் தொட்டுச்செல்ல மூத்த எழுத்தாளர்கள் துடுப்பாக இருக்க வேண்டும் .

அவ்வாறு இருந்தால் தான் இன்று உருவாகிய பயாஸா பாஸிலைப் போன்ற பெண் ஆளுமைகள் பிறப்பிக்கப்படுவார்கள்.

என் எழுத்துக்கு ஒரு தசாப்தத்தை பிரசவித்த அன்னை பயாஸா பாஸில் தன் வாழ்வில் ஏற்பட்ட பல தடைகளையும் தாண்டி ஒரு தசாப்தம் அதன் வலிகளை உணர்ந்து இந் நூலினை உயிர்ப்பித்துள்ளார்.என்றும் இவர் இஸ்லாமிய பெண் எழுத்தாளராக திகழ்ந்து நம் சமூக மக்களுக்கு நற் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.




# கார்கி திரை விமர்சனம்

பாத்திமா சபா
யாழ் பல்கலைக்கழகம், கலை பீடம் (ஊடகத்துறை)

வியாபார நோக்கத்திற்காக இயங்கும் இந்திய சினிமாவில் யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு தனித்துவமாக 2022 ஆம் ஆண்டிலேயே தலைசிறந்த திரைப்படமாக வெளியாகிய திரைப்படம் தான் கார்கி.

இந்தத் திரைப்படத்திற்கு கோவித் வசந்தா இசை அமைத்துள்ளார். மேலும் சினியந்தி என்பவர் ஒளிப்பதிவு செய்துள்ளார். பல உண்மை சம்பவங்களை தழுவி எடுக்கப்பட்ட இத்திரைப்படத்தின் கதை சுருக்கத்தை மேலோட்டமாக பார்த்தோமாயின் சாதாரண குடும்பத்தில் பிறந்து ஆசிரியராக கடமை ஆற்றிக் கொண்டிருக்கின்ற கதாநாயகியின் தந்தை ஒரு அப்பார்ட்மெண்டில் வேலை செய்கின்றார். அதே அப்பார்ட்மெண்டில் ஒன்பது வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றாள். போலீசார் ஐந்து நபர்களை குற்றவாளியாக கைது செய்கின்றனர். அதில் ஐந்தாவது நபர் கதாநாயகியின் தந்தை.

ஒரு சாதாரண பெண்ணாக இருந்து கொண்டு அதிக அனுபவம் இல்லாத ஒரு வழக்கறிஞர் மூலமாக தன் தந்தை நிரபராதி என்பதை நிரூபிக்க போராடுகின்றாள் கதாநாயகி. இறுதியில் அதை நிரூபித்தாளா? இல்லையா? என்பதனை அற்புதமான காட்சியமைப்பும் மற்றும் வசனங்களின் துணையுடன் மிகவும் சுவாரஸ்யமாகவும் யதார்த்தமான பாணியுடனும் மக்களிடம் கொண்டு போய் சேர்த்துள்ளார் இயக்குனர் கௌதம் ராமச்சந்திரன்.

திரைப்படத்தின் உடைய திரைக்கதை ஒரே மாதிரியான களத்தின் ஊடாகவே நகர்ந்துள்ளது. காரணம் இந்த கதைக்கு அந்த மாதிரியான திரை கதையே அவசியமாகும். இப் படத்தின் முதல் 12 நிமிடத்தில் கதையுடைய முக்கியமான கதாபாத்திரங்களின் மனநிலையை இயக்குனர் காட்சியமைப்பின் மூலமே காட்டியுள்ளார்.

திரைப்படத்தில் சரியாக 15 வது நிமிடத்தில் பார்வையாளர்களுக்கு கதை சொல்லப்படுகின்றது. திரைப்படத்தின் 30தாவது நிமிடத்தில் கதை இன்னும் தீவிரமடைகின்றது. அத்துடன் அடுத்தடுத்த காட்சிகளில் குழப்பம் இன்றி தெளிவாக தனது சுவாரஸ்யமான திரைக்கதை மூலம் கதையை நகர்த்தியுள்ளார் இயக்குனர்.

முக்கியமாக இப்படத்தில் female protagonism மிக வலுவாக அமைந்துள்ளது. அதாவது பெண் கதாபாத்திரங்களை மிகவும் வலிமையாக உருவாக்கி முன்னிலைப்படுத்தி கதை அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்து படத்தின் கதாபாத்திரங்கள் மற்றும் அவர்களின் நடிப்பு என்பன மிக இயல்பாக அமைந்ததால் பார்வையாளர்களின் மனதில் நெருக்கமாக இடம் பிடித்தது. குறிப்பாக



துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுமியின் தந்தையின் நடிப்பு மிகவும் பிரமாதமாக இருக்கின்றது. குறிப்பாக திரைப்படத்தில் கதாநாயகி உட்பட ஏனைய நடிகர்கள் மேக்கப் இல்லாமல் நடித்திருப்பது சிறப்புக்குரிய விடயமாகும்.

அடுத்து திரைப்படத்தினுடைய editing ஐ பொறுத்தவரையில் பொதுவான திரைப்படங்களில் இருப்பது போல் standard cut, J cut, L cut, parallel cut போன்றனவும் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது. மிகவும் பொருத்தமான இடங்களில் match cut உம் இடம்பெற்றிருக்கின்றது. இன்னும் fade in fade out, dissolve போன்ற உரவ வகைகளும் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

திரைப்படத்தில் கையாளப்பட்ட வசனங்கள் மிகவும் பொருத்தமான இடத்தில் அழுத்தமாக அமைந்திருந்தது. குறிப்பாக ஒரு திருநங்கையை இங்கு நீதிபதியாக காட்டியிருப்பது மிகவும் சிறப்பான விடயமாகும் அதிலும் குறிப்பாக இயல்பான மனிதராக இருந்தால் இந்த வழக்கு எப்போதோ தீர்ந்திருக்கும் இந்த மாதிரியானவர் எப்படி தீர்ப்பளிப்பார்கள் என நக்கலாக வழக்கறிஞரால் கூறப்பட்ட வசனத்திற்கு அந்த நீதிபதி ஒரு பெண்ணுக்கு எங்கு வலிக்கும் என்பதும் எனக்கு தெரியும். ஒரு ஆணுக்கு எங்கள் திமிரு இருக்குனும் எனக்கு தெரியும் என்று கூறும் பதிலடி மிகவும் அழுத்தமாக இருந்தது.

அடுத்ததாக திரைப்படத்தில் லைட்னிங் மற்றும் கேமரா என்பவற்றை பொருத்தவரையில் மிகவும் அழகாக கையாளப்பட்டிருந்தன. குறிப்பாக இரவு நேர காட்சிக்கான லைட்னிங் தெளிவாக அமைந்திருந்தது. கேமராவை பொறுத்தவரை அதிகமான நீண்ட single shots மற்றும் following moment shots பயன்படுத்தப்பட்டிருந்தது. wide, long shots உம் mid over the shoulder போன்ற ளாழசவள வகைகள் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்பட்டு இருந்து. மேலும் close up shots ஊடாக உணர்வுகள் மிக அழகாக காட்டப்பட்டன. அவ்வாறே colour creating இயல்பாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

அடுத்து இத்திரைப்படத்தினுடைய இசை மற்றும் sound என்பவற்றை பொருத்தவரையில் படத்திற்கு எது தேவையோ அதை மட்டும் பயன்படுத்தி இருகின்றனர். முக்கியமாக பாடல்கள் தனித்து இடம் பெறாமல் கதையின் ஓட்டத்துடனே இடம்பெற்றன. சில இடங்களில் sound effect மிகவும் அழுத்தமாக இருந்தது. அத்துடன் டளைந எழரனெ லேயே திரைப்படம் படம் பிடித்து காட்டப்பட்டுள்ளது. முக்கியமாக உணர்வு பூர்வமான Bgm மூலம் அழுத்தமாக உணர்வுகளை கடத்தப்பட்டன.

ஆக மொத்தத்தில் திரைப்படம் வித்தியாசமான முடிவுடன் நிறைவு பெறும் என்பதில் சந்தேகம் இல்லை. இப்படத்தில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தையின் முகம் காட்டப்படுமா? இல்லையா? கதாநாயகியின் தந்தை உண்மையான குற்றவாளியா? இல்லையா ? இறுதியில் கார்கி என்ற கதாநாயகி மற்றும் சுற்றியுள்ளவர்களுக்கு நடந்த மாற்றம் என்ன? போன்ற பல்வேறு விடயங்களை யூகிக்க முடியாத திருப்பங்களுடன் காட்டி இருப்பது திரைப்படத்தின் தனித்துவமான அடையாளமாகும்.



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 27 | 28 பெப்ரவரி 2023



# பெருகி வரும் போதை அரக்கர்களால் தள்ளாடும் இலங்கை!

முஹம்மட் ஹாசில் (ஊடகவியலாளர்)
இணையாசிரியர் - துணிந்தெழு

இலங்கை நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட அழகியதொரு தீவாகும். நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்திற்கு சொந்தம் கொண்டாடும் இந்நாடு, தனித்துவம்மிக்க மரபுரிமையைக் கொண்டிருக்கின்றது. ஆனால் அண்மைக்காலமாக எமது நாட்டுக்கு பெரும் சாபக் கேடாக மாறியிருப்பது போதைப் பொருள் பாவனையாகும். முன்னொருபோதுமில்லாத வகையில் எந்தப் பக்கம் திரும்பினாலும் போதைப் பொருள் விசமம்தான் தலைவிரித்தாடிக் கொண்டிருகின்றது. எமது நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் மிகப் பெரும் சவால் போதைப் பொருளுக்கு எதிரான போராட்டமாகும். அன்று மறைமுகமான போராட்டமானது இன்று நேருக்கு நேரான போராட்டமாக மாறியுள்ளதையே காண முடிகின்றது.

போதைப்பொருள் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அவை வெளிநாடுகளில் இருந்து இங்கு கொண்டுவரப்படுகின்றன. சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்படுகின்றது. அவற்றில் ஹெரோயின், கேரளா கஞ்சா, ஐஸ் உள்ளிட்டவை முக்கியமானவையாக விளங்கின்றன. போதைப்பொருள் மாத்திரைகளும் கூட சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்படுகின்றன.

போதைப்பொருட்களில் பெரும்பாலானவை கடல் வழியாகவே இந்நாட்டுக்குள் கடத்தி வரப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நாட்டுக்குள் சட்டவிரோத போதைப்பொருட்கள் வந்து சேரும் முக்கிய கடல் பரப்புகளாக வடபகுதியும் சர்வதேச கடற்பாதையும் விளங்குகின்றன. போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் செயற்பாடுகளை ஒழிக்க முயற்சித்தும் இவை இரண்டும் குறைந்தபாடில்லை. இவைகளின் தாக்கம் அதிகரித்து கொண்டே செல்கின்றது.

ஏன் இவ்வாறான ஒரு நிலையென்றால் ஆரம்ப காலத்தில் சாராயம், கள் என்றிருந்த போதை இன்று பல்வேறு வடிவம் பெற்று புதுப்புது வடிவங்களில் உலா வந்து கொண்டிருக்கின்றது. திடீர் பணக்காரனாக வேண்டும் என ஆசைப்படுபவர்கள் போதை வியாபாரத்தில் ஈடுபடுவதை அதற்கான இலகுவான வழியாகப் பார்க்கின்றனர். போதை வியாபார மாபியாக்கள் அரசியல் பண பலத்துடன் தங்களது சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி வருகின்றன். ஆரம்பத்தில் நகர்ப்புறங்களைக் குறிவைத்த இவர்கள் இப்போது கிராமப் புறங்களையும் கூட குறிவைத்து குழிபறித்து வருகின்றனர். அப்பாவி இளைஞர்கள் மட்டுமன்றி யுவதிகள் கூட போதை முகவர்களின் வியாபார யுக்தியில் வீழ்ந்து வருகின்றனர்.

இப்பொதைப்பொருட்களின் தாக்கங்களையும் பாதிப்புகளையும் பெரும்பாலானவர்கள் அறியாதவர்களாக உள்ளனர். அந்த நிலையில்தான் பெரும்பாலானவர்கள் அதன் பாவனைக்குள் உள்ளீர்க்கப்படுகின்றனர். ஆனால் அதற்கு அடிமையாகி நடைப்பிணமாகவும் மாறி காலப்போக்கில் அழிந்து விடவும் வழிவகுக்கக் கூடியதாக உள்ளது இப்போதைப்பொருட்கள்.

இப்போதைப்பொருள் பாவனையினால் ஏற்படக் கூடிய நோய்களும், பாதிப்புகளும் சாதாரணமானவை அல்ல. அவை பெரும்பாலும் உடல், உளரீதியில் பெருந்தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தக்கூடியவை. குறிப்பாக நரம்புத்தொகுதியை இலக்கு வைத்து தாக்கி பாதிக்கும் தன்மையைப் போதைப்பொருட்கள் கொண்டிருக்கின்றன.

மேலும் போதைப்பொருள் பாவனையின் விளைவாக ஏற்படுகின்ற சமூக சீரழிவுகளும் சாதாரணமானவை அல்ல. இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள பல சமூக சீர்கேடுகளுக்கு போதைப்பொருள் குற்றங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. நாட்டில் அண்மைக் காலமாக குடும்ப சீரழிவுகள் அதிகரித்துள்ளன. அவற்றில் இளம் தம்பதியினர் மத்தியிலான விவகாரத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இப்போதைப்பொருட்களின் பாவனை காரணமாக பல குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளதோடு, வறுமையின் பிடிக்குள்ளும் வலிந்து தள்ளப்பட்டுள்ளன. பல குடும்பங்கள் தெருவுக்கும் வந்துள்ளன. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கும் போது போதைப்பொருட்களின் மூலம் தனிநபருக்கோ, சமூகத்திற்கோ, நாட்டுக்கோ எந்த நன்மையுமே கிடைப்பதில்லை என்பது தெளிவாகிறது.

இவ்வாறான சூழலில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ள தகவல் பல்வேறு மட்டங்களினதும் அவதானத்தை ஈரத்துள்ளதோடு, நாட்டில் முக்கிய பேசுபொருளாகவும் மாறியுள்ளது.

அதாவது, "இந்நாட்டில் பெற்றோர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதால் சுமார் 12 ஆயிரம் சிறுவர்கள் அனாதை இல்லங்கள் அநாதரவாகக் கைவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள பெரும்பாலான பெற்றோரின் பிள்ளைகள் தங்கள் பாட்டன் அல்லது பாட்டியுடன்தான் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர்" என்றும் கூறியுள்ளார்.

மனிதாபிமானம் மிக்க ஒவ்வொருவரது உள்ளத்தையும் தொடக்கூடிய இத்தகவல் முற்றிலும் வேதனை மிக்க செய்தியாகும். பொதுவாக ஒவ்வொரு பிள்ளையும் தாயினதும் தந்தையினதும் அன்பையும் அரவணைப்பையும் எதிர்பார்ப்பது இயல்பு. அது குழந்தை பெற்றுள்ள உரிமையாகும். அந்த எதிர்ப்புக்கு அமைய செயற்பட வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது. ஆனால் பெற்றோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளதால், அவர்களால் குழந்தைகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவற்றில் அன்பு, அரவணைப்பு மாத்திரமல்லாமல் உணவு, உடை உள்ளிட்ட தேவைகளைக்கூட பெற்றுக் கொடுக்கப்படாத நிலை உருவாகியுள்ளது. அதன் காரணத்தினால் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள பெற்றோரின் யாதுமறியாத அப்பாவிப் பிஞ்சுகள் அன்பு, அரவணைப்புக்கான எதிர்பார்ப்பிலும் ஏக்கத்திலும் காலத்தை கழிக்கும் துரதிஷ்ட நிலைக்குள் தளப்பட்டு இருக்கின்றனர். அதன் விளைவாக சில பிள்ளைகள் உளரீதியிலான தாக்கங்களுக்கும் கூட உள்ளாகியுள்ளனர்.

அதேநேரம் பெற்றோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதால் அநாதை நிலையங்களில் அநாதரவாக விடப்பட்டுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையையும் சாதாரண ஒன்றாக நோக்க முடியாது. 12 ஆயிரம் பிள்ளைகள் அனாதை இல்லங்களில் அநாதரவாக விடப்பட்டுள்ளார்கள் என்றால் அந்நிலையங்களுக்கு வெளியில் எவ்வளவு பிள்ளைகள் நிர்க்கதி நிலையில் பலவித அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்தபடி இருப்பார்கள் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத வேதனையே அன்றி வேறில்லை. அதனால் இது தொடர்பில் சமூக, சமய நிறுவனங்களும் சமூக ஆர்வலர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் போதைப்பொருள் பாவனையே பாடசாலை மாணவர்கள் பலரிடம் காணப்படுவதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன. பாடசாலை மாணவர்களில் ஆண்கள் பலரிடம் மாத்திரமன்றி பெண்களிடமும் இப்பழக்கம் படிப்படியாக அதிகரித்து வருவதாக சில தினங்களுக்கு முன்னர் செய்தியொன்று வெளியாகியிருந்தது. பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரிகள் பணமீட்டுவதற்கு முயற்சிப்பதை அறிய முடிகின்றது. இளவயதினரை போதைப்பொருளுக்கு அடிமையாக்குவது இலகுவானதென்று போதைப்பொருள் வியாபாரிகள் கருதுவதாகத் தெரிகின்றது. எனவேதான் பாடசாலை

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருளை விற்பனை செய்வதில் போதைப்பொருள் வியாபாரிகள் தற்போது கவனம் செலுத்தி வருகின்றனர்.

போதைப்பொருள் ஆபத்தில் இருந்து எமது எதிர்கால சமுதாயத்தைக் காப்பாற்றுவதில் அனைத்துத் தரப்பினரும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். போதைப்பொருள் ஆபத்து குறித்து சமூகமட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. மாணவர்களிடம் மாத்திரமன்றி, பெற்றோர் மற்றும் சமூகநலன்விரும்பிகள் மத்தியில் இதுபற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசரத் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதில் பாடசாலை சமூகத்துக்கும், பெற்றோருக்கும் பாரிய பங்கு காணப்படுகின்றது. மாணவர்களை வீட்டுச் சூழலில் பெற்றோரும், பாடசாலைச் சூழலில் ஆசிரியர்களும் கண்காணிப்பது மிகவும் அவசியம். மாணவர்களின் அன்றாட நடத்தையில் மாற்றமெதுவும் தென்படுகின்றதா என்பதை அவதானிக்க வேண்டும். அவ்வாறு மாற்றமெதுவும் தென்படுமானால் அது குறித்து உரிய தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் பொறுப்பாகும்.

மாணவர் ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளாரெனத் தெரியவந்ததும் அதனை ஆசிரியர்கள் அலட்சியப்படுத்துதல் கூடாது. அம்மாணவரை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுத்து நல்வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் அதிபரும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும். இதனை ஒரு சமூகக்கடமையாக ஆசிரியர்களும் அதிபரும் நிறைவேற்ற வேண்டும்.

பெற்றோருக்கே இந்த விடயத்தில் பாரிய பொறுப்பு உள்ளதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் தங்களது அதிகமான நேரத்தை வீட்டிலேயே கழிக்கின்றனர். பிள்ளைகள் நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டிய முதலாவது பாடசாலை அவர்களது இல்லம் ஆகும். பிள்ளைகளுக்கு நல்வழி காட்ட வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்கே உள்ளது. பெற்றோர் எவ்வாறு அறிவுரை புகட்டுகின்றார்களோ அந்த அறிவுரைக்கேற்பவே அப்பிள்ளை வளர்ந்து வருமென்பதை மறந்து விடலாகாது.

தமது பிள்ளைகளின் நட்பு வட்டம் குறித்து பெற்றோர் மிகுந்த அவதானமாக இருப்பது முக்கியம். தீயநடத்தைகள் கொண்ட நண்பர்களுடன் தமது பிள்ளைகள் நட்பு வைத்துள்ளனரா என்பது குறித்த அவதானம் பெற்றோர் மத்தியில் எப்போதும் இருக்க வேண்டும்.பிள்ளைகளின் மாறுபாடான நடத்தைக் கோலம் ஆரம்பத்திலேயே அவதானிக்கப்படுமானால் போதைப்பொருள் பாவனையை ஆரம்பத்திலேயே கண்டறிந்து விடலாம். அப்பிள்ளையை போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடச் செய்வதும் இலகுவாயிருக்கும்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரை இலக்கு வைத்து அவர்களை தீயவழியில் இட்டுச் செல்வதற்கு முற்படுகின்ற குற்றவாளிகள் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது சமூகநலனில் அக்கறையுள்ள அனைவரினதும் கடமையாகும். போதைப்பொருள் குற்றவாளிகள் தொடர்பில் பொதுமக்கள் வழங்குகின்ற தகவல்கள் ஒவ்வொன்றும் போதைப்பொருள் குற்றங்களை ஒழிப்பதில் பொலிசாருக்கு உதவியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

இவ்வாறான சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து இப்போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்கள் குறித்து முக்கிய தீர்மானமொன்றை அரசாங்கம் எடுத்திருக்கின்றது. இத்தீர்மானத்திற்கு அமைய நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான திருத்தச் சட்டமூலம் டிசம்பர் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தியோகபூர்வமாகக் கையெழுத்தும் இட்டுள்ளார். இதன் ஊடாக 2022 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

இத்திருத்தச் சட்டத்திற்கு அமைய அபின், மோர்பீன், கொக்கெய்ன், ஹெரோயின் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் தொடர்பிலான குற்றங்களுக்கான தண்டனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப இக்குற்றங்களுக்கு மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்பட இருக்கின்றது. கஞ்சா தொடர்பான குற்றங்களுக்கும் தண்டனைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இப்போதைப்பொருட்களை

உடைமையில் வைத்திருப்பது, விற்பனை செய்வது, இறக்குமதி செய்வது அல்லது ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட அனைத்தும் இத்திருத்தங்களுக்கு அமைய சட்டவிரோத செயற்பாடுகளாக ஆக்கப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குவிதிகள் மீறப்படும் போது போதைப்பொருட்கள் குற்றங்களுக்கான தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும்.

அதுமாத்திரமல்லாமல் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சமூக ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டமொன்று அண்மையில் பொலிசாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் குற்றங்களில் இருந்து இளம் சமூகத்தினரை விடுவிப்பதை இலக்காகக் கொண்டுதான் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்திய இவ்வாறான திட்டங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அப்போதுதான் போதைப்பொருள் குற்றங்களில் இருந்து இளம் பராயத்தினர் உள்ளிட்ட முழு நாட்டு மக்களையும் விடுவிக்கக் கூடியதாக இருக்கும்.

இன்றைய இளம் பராயத்தினர்தான் நாளை நாட்டையும் சமூகத்தையும் நிர்வகிக்கக் கூடியவர்களாவர். அவர்கள் மத்தியில் சமீப காலமாக போதைப்பொருள் குற்றங்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன. அவ்வாறு ஏற்பட்டு வருகின்ற அதிகரிப்பு நாட்டின் நாளைய பொறுப்புக்களை ஏற்க ஆளில்லாத நிலையைத் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சநிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே இந்நாட்டு இளம் பராயத்தினரின் சுபீட்சமானதும் வளமானதுமான வாழ்வுக்காக போதைப்பொருள் பாவனையிலிருந்து ஒவ்வொருவரையும் விடுவிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளையும் வேலைத்திட்டங்களையும் கிராம மட்டத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து பிரஜைகளதும் எதிர்பார்ப்பாகும். அப்போதுதான் நாட்டையும் மக்களையும் போதைப்பொருள் அரக்கனிலிருந்து முழுமையாக விடுவிக்கக் கூடியதாக இருக்கும்.

# இஸ்லாமி உளவளத் துணையும் கிழக்கிலங்கையும் நூல் வெளியீட்டு விழா

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாத்திமா ஷீபா இப்றாஹீம் எழுதிய “இஸ்லாமி உளவளத் துணையும் கிழக்கிலங்கையும்“ நூல் வெளியீட்டு விழா


இஸ்லாமி உளவளத் துணையும் கிழக்கிலங்கையும் நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை (05-02-2023) மாலை மருதமுனை பொது நூலக மண்டபத்தில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.நெய்னா முகம்மட் தலைமையில் நடைபெற்றது.












# நளினி ஜமீலா

## ஒரு பாலியல் தொழிலாளியின் சுயசரிதை.

- பாரிக்-

நிறைய வலிகள்.
நிர்ப்பந்தமான பாதை மாறல்கள்.
அனுமதிக்காத எல்லை மீறல்கள்..

ஏமாற்றையும் வயிற்றில் அடிப்பையும் உடல் சூரையாடல்களையும் தவிர வேறு எதையுமே அறிந்திராத சமுதாய விளிம்பு நிலை சனங்கள்...

இப்படியெல்லாம் காதலிக்கக் கூடாது என்பதைக் காட்டத்தானே தவிர இப்படித் தான் காதலிக்க வேண்டும் என்று கூறுவதற்கல்ல இந்த நாளிதல் தொடர் காதல் கதைகள்" தன் மகளுக்கு நளினி ஜெமீலா கூறும் அந்த வார்த்தைகள் கே ஜீ எப் ராக்கி பாயின் தாயின் வார்த்தைகளை விடவும் அங்கு பல மடங்கு உயர்வில் இருக்கும்.

ஒவ்வொரு திருப்பு முனைகளின் போதும்" சமுதாய மரபுகள் என்பன மீறப்படுவதற்கென்றே கட்டமைக்கப்பட்டுள்ள அபத்தங்கள்" என்பதை நோக்கி மனதை மதிக்காத சமுதாயத்தின் சகல பிரிவுகளாலும் உடல் மோகிகளாலும் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் ஜெமீலா ஒரு அபலையாக நடமாடும் பெரும் சோகப் பண்டமாகவே உள்ளார்.

அழகான ஒரு மகள் உள்ள தெருவோரத் தாய்கள் படும் வேதனையை பல இடங்களில் தன் வாழ்வியல் துயர் மூலமாக தத்ரூபமாக சொல்லி உள்ளார் ஜெமீலா.

பசி தான் இங்கு அழைந்து திரிந்து காணும் பலவீனர்களையெல்லாம் வேட்டையாடிக் குதறி எடுக்கும் மிகப் பெரும் மிருகம் என்பதை பல இடங்களில் காட்டியுள்ளார். செல்வத்தோடு வாழும் காலமெல்லாம் ஒட்டி நின்று முன்டியடித்து தோலோடு தோல் நின்றவர்களெல்லாம் சரிவுகளின் போது சிறு சலசலப்புக்கெல்லாம் சிதறிச் செல்லும் காக்கைக் கூட்டமாய் ஒடிப் போகும் அவலங்களையெல்லாம் உடனிருந்து அனுபவிக்கச் செய்யும் அற்புத கதைக் கோர்வை..

காசுக்காகவே அனைத்தும் இங்கு என்பதோடு காதலர்களின் கதைகளில் காதல் நிரம்பிவழிவதைப் போல் மாயாவிக் கதைகளில் சாகசம் நிரம்பி வழிவதைப் போல் புலனாய்வாளர்களின் கதைகளில் திருப்பங்களும் அதிர்ச்சிகளும் தலைவிரித்தாடுவதைப் போல் ஒரு பாலியல் தொழிலாளியின் கதையில் காமமும் ஆபாசமும் நிரம்பியிருக்கும் என்று இதை வாசிக்க வந்தால் கிரீம் கிரெக்கர் பிஸ்கட்டில் கிரீம் போல் தான்.. அல்லது பூலோக சுவர்க்கம் என்று சொல்லும் இலங்கையில் கொட்டிக் கிடக்கும் செல்வச் செழிப்பு போல் தான் இந்தக் கதையிலும்... தேடுவதைத் தவிர சிறந்தது அனைத்தும் இருக்கும்.

மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்றாலும் குளச்சல் முஹம்மது யூசுப் இதனை தாய்ப் பிரதியின் அதே மொழிநடையை கையாண்டு மொழிபெயர்ப்பு என்று நாம் கற்பனையே செய்ய முடியாத தளத்தில் வைத்துள்ளார் என்பதே சிறப்பானது.

நேரமொதுக்கி வாசிக்கவும்.



# திருமதி ஆயிஷா ஷேக் எனும் அதிபரின் பெண் ஆளுமையும் கஹகொள்ள பத்ரியாவும்...! (வாழ்வும் வரலாற்று பின்னணியும்)

நேர்காணல்: இப்னு அமீர்கான்
பாடசாலை பழைய மாணவன்

## உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் திருமதி ஆயிஷா வாஹித் ஷேக். 1984.12.27 ல் இலங்கை ஆசிரியர் சேவையில் இணைந்து, 2010.02.10 திகதி முதல் இலங்கை அதிபர் சேவைக்கு பதவிக்கு உயர்வுப்பெற்று 2022.12.31 இல் 38 வருட சேவையை முடித்து ஓய்வு பெற்றேன்.

## உங்கள் குடும்ப பின்னணி

எனது சொந்த ஊர், பிறப்பிடம், 10 வயது வரை வாழ்ந்த இடம் நாவலப்பிட்டிய பிரதேசமாகும். 10 பேர் கெண்ட குடும்பத்தில் 9 ஆவது பிள்ளை. 5 ஆண்கள் 5 பெண்களென 10 சகோதர சகோதரிகள். எனது தந்தை நாவலப்பிட்டி, தாய் புகஸ்தலாவ எனும் ஊரைச் சேர்ந்தவர்கள்.

## உங்களுடைய ஆரம்ப கல்வி, உயர்தர கல்வி மற்றும் பாடசாலை வாழ்க்கை எவ்வாறானது?

எனது ஆரம்பம் கல்வி நாவலப்பிட்டி-வெஸ்ட்ஹோல் தமிழ் கலவன் பாடசலையில் ஆரம்பித்தது 1 - 5 வகுப்பு வரை இங்கு கல்வி கற்றேன். யாழ் மண்ணின் ஆசிரியர்களிடமே முதலில் ‘அ’ எனக்கற்றேன் மணல் தட்டில் விரலைப் பிடித்து எழுத்துக் கற்பித்தார்கள். இன்றும் தமிழ் மொழியினை பிழையறப் பிரயோகிக்க இதுவே வாய்ப்பாக அமைந்தது எனலாம். 1974 ஆம் ஆண்டில் மலையகத் தோட்டங்களை அரசு பொறுப்பேற்ற போது அதுவரை சாரதியாகத் தொழில் பார்த்த எனது தந்தை தனது குடும்பத்துடன் குருநாகலை நாரம்மல பிரதேசத்திற்கு குடி பெயர்ந்தார். அவரது உடன் பிடிப்புக்கள் இருவர் (தம்பி, தங்கை) அப்போது நாரம்மலையில் இருத்தமையே இதற்குக் காரணம். க.பொ.த (சா.த) வரை ஹொரம்பாவ மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். க.பொ.த (உ.த) கற்பதற்காகக் அன்று KCC என அமைக்கப்பட்ட கெக்குணுகொல்ல மத்திய கல்லூரிக்கு சென்றேன். எனது வாழ்வின் திரும்பற் புள்ளி அங்கே தான். கல்வியியலாளரான ஆ.லு முஸ்லிம் அவர்கள் அப்போது அங்கே அதிபராக இருந்தார்.

## பல்கலைகழக கல்வி மற்றும் துறைசார்ந்த பட்டப்படிப்பு பற்றி

தொடர்ந்து பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு 1984 ,ல் தெரிவாகினேன். கெக்குணுகொல்ல மத்திய கல்லூரியின் கௌரவ அதிபர் ஆ.லு முஸ்லிம் அவர்களின் வழிகாட்டலில் ஸனூஸ் சேர், சித்தீக் சேர், மஞ்சுளா டீச்சர், வஸீரா டீச்சர் உளிட்ட ஆசிரியர் குழாத்தின் பயிற்சி காரணமாக

பெருந்தொகையான மாணவர்கள் பல்கலைகழகம் செல்லக் கூடியதாக இருந்தது. தொடர்ந்து 1994.95 ஆம் கல்வி ஆண்டில் தேசிய கல்வி நிருவகம் மூலம் எனது பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறியை பூர்த்தி செய்து பின்னர் தனியார் கல்வி நிர்வாகத்தின் மூலம் கல்வி முகாமைத்துவப் பாடநெரியைப் பூர்த்தி செய்து கொண்டேன்.

## உங்களது இலக்கிய முயற்சிகள் மற்றும் அனுபவங்கள் குறித்து? (பத்திரிகை ஆக்கங்கள், கட்டுரை, கவிதை....)

கவிதை, கட்டுரை, பேச்சு போன்ற இலக்கிய ஆற்றல்கள் இறைவன் எனக்களித்த வரங்களெனவே நினைக்கிறேன். 15-16 வயதுகளிலிருந்தே எனது இலக்கிய பிரவேசம் தினகரன், தினமதி, சிந்தாமணி, கையெழுத்து பிரதிகள் மூலம் பயணிக்கிறது. தொடர்ந்தும் செந்தூரம், நவமணி பத்திரிகை, இலங்கை வானொலி முஸ்லிம் சேவை மூலமும் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் இலக்கிய பயணம் தொடர்ந்தது.

## ஆசிரியர் தொழில் அனுபவம் பற்றிக் குறிப்பிடுங்கள்?

1984.12.27 இல் நான் எனது 21 வது வயதில் ஆசிரியராக இணைந்து கொள்கிறேன். கல்வி கற்ற பாடசாலையிலே சுமார் 06 வருடங்கள் தொழில் புரிந்து பின்னர் 1990 இல் திருமண பந்தத்தின் நிமித்தம் தியத்தலாவ பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்றேன்

## உங்களைக் ஆசிரியராக வளர்த்த பின்னணி என்ன?

12 பேர் கொண்ட குடும்பம், தந்தையினது மட்டும் வருமனம், வசதி வாய்ப்புகள் அற்ற நிலைமை கல்வி மட்டுமே கருந்தனமாக முதலீடு செய்ய முடந்தமை, ஆசிரியராக வேண்டும் என்ற அவா. பெற்றார், ஆசிரியர்களின் எனக்கான பிரார்த்தனைகள் எல்லாவற்றுக்கும் மேலாக இறை நியதி நான் ஆசிரியரானேன். கற்கும் போதும் சரி கற்பிக்கின்ற போதிலும் சரி விடுமுறை எடுக்கக் கூடாது என்கின்ற எனதன்பு தாயாரின் வழிட்டல். இவை என் வாழ்வின் தொழில் வெற்றிக்கு உறுதுணைகள்.

## அதிபராக உங்களது பதவி உயர்வும் வெற்றிப்பயணமும்

2006 ஆண்டு நடாத்தப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி ஊவா மாகாணத்தில் தெரிவாகிய 5 முஸ்லிம்களில் நானும் ஒருவர் இறைவனுக்கே புகழனைத்தும். 2010.02.10 ஆம் திகதி நான் இலங்கை



அதிபர் சேவை தரம்-2 இற்கு உள்வாங்கப்பட்டேன். 2014.06.27 ஆம் திகதி கஹகொள்ள அல் - பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டேன். அன்று முதல் எனது சொந்த ஆசாபாசங்கள் அனைத்தும் வரையருக்கப்பட்டதுடன் கடமை ஒன்றையே என் கருத்தில் வளர்க்க வேண்டியதாயிற்று. இறைவன் எனக்களித்த தைரியம், என்னோடு இணைந்திருந்த தொழில் உறவுகள், பாடசலை போசனைப் பிரதேச பெற்றார்கள், அரசு சாரா அமைப்புக்கள், கல்விப் புல நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் அனைத்துமே எனது வெற்றிப் பயணத்தில் கைக்கோர்த்தன என கூறலாம்.

## அதிபர் சேவையினை இக்காலம் வரையும் திறம்பட செய்திட குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது?

அதிபர் சேவையில் எனது பயணம் பல மைல் கற்களை கடந்து வெற்றி கொடியை நாட்டியதாயின் முதற் காரணம் எனது குடும்பமே. ஆமாம்! எனது கணவர், 3 பிள்ளைகள் அவர்கள் செய்த தியாகங்கள் எண்ணிலடங்காது. 8 வருடங்களும் 6 மாதங்களையும் கொண்ட அதிபர் சேவைக் காலத்தில் பல்வேறு சம்பவங்கள் கோடிட்டுக் கட்டலாம். உதாரணமாக எனது மூத்த மகனுடைய திருமணம் 2017 இல் நடைபெற இருந்த போது நான் 3 நாள் செயலமர்வில் கொழும்பு சென்று கட்டாயமாகப் பங்குபற்ற




வேண்டியிருந்தது. காரணம் செயலமர்வின் விடயங்களை பாடசாலைக்கு கொண்டு வந்து சேர்க்கும் பதவி நிலைப் பொறுப்பு எனக்கிருந்தது. எனது கணவரும் 3 பிள்ளைகளும் சீர் செய்தமையால் திருமண ஒப்பந்தம் நடக்க சில மணித்தியாலங்களுக்கு முன்பாகவே நன் வரமுடிந்தது. இவ்வாறே இரவு நேர வகுப்புகள் முடித்து விட்டு நான் வீடு வரும் போது எனது 2 பிள்ளைகள் பசியுடன் நித்திரை செய்த சம்பவங்கள் பல. இங்கே எழுத்தில் வடித்து முடிக்க இயலாக எண்ணற்றத் தியாகங்களை செய்துள்ள எனது குடும்பத்திற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

### ஒரு பெண் அதிபரான உங்களை பாடசாலை சமூகம் எவ்வாறு பார்க்கின்றது?

பெண் அதிபர் எனும் போது நிறையவே சவால்கள் நிலவின எனலாம். பெண்கள் பலவீனர்கள் எனும் பொது அபிப்ராயம் சமூகத்தில் நிலவுகின்றது. பெண்களின் தலைமைத்துவம் மார்க்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது எனும் கருத்தும் நிலவுகின்றது. எனினும் தவிர்க்க முடியாத குழ்நிலையில் செயற்பட வேண்டியதாயிற்று. இவரால் எதனை செய்ய முடியாது என சிலரும், உங்களை பதவியிறக்கம் செய்வோம் அல்லது வேறிடம் அனுப்பிவிடுவோம் என பலரும் கங்கணம் கட்டியிருந்த பின்புலத்துடனே எனது பயணம் ஆரம்பித்தது.

### ஒரு பெண் அதிபரான உங்களை பாடசாலை சமூகம் எவ்வாறு பார்க்கின்றது?

நான் மேலே கூறியவாறுதான் வெளிச்சமூகம் பெண் அதிபரைப் பற்றி கருதுகின்றது. எனினும் அவர்களின் எண்ணப்பாடுகளை இறைவன் பொய்ப்பித்து விட்ட நிலையில் அனுபவ பூர்வமாகவே பெண் அதிபரை இன்று சமூகம் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சேவை எனும் தேவை ஏற்படும் போது பெண் என்ன ஆண் என்ன கடுமமாற்றுவதே முக்கியம் என சமூகம் தனது நிலைப்பாட்டைத் தளர்த்தி கொண்டுள்ளமை பாராட்டத்தக்கது.

பெண் அதிபர் பற்றிய பாடசாலை சமூகத்தின் பார்வை சற்று விதியாசமானது. அதாவது பிரச்சினை அணுகுதல், அனுசரித்துப் போதல், உதவி ஒத்தாசை, ஒத்தழைப்பு, புரிவு, பரிவு என்றெல்லாம் நோக்கும் போது பெண் அதிபர் பரவாயில்லை, அவரும் சாதிக்கலாம். இதற்காக எமது உதவி 100% எனும் மனநிலை நிதர்சனம் ஆகின்றது.

### கஹகொள்ள பத்ரியா பாடசாலை பற்றிய உங்களின் அனுபவம்...

அல் பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் எனது ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைக் காலங்கள் வாழ்வில் மறக்க முடியாத காலங்களாகும். 1990.01.03 இந்த பாடசாலையில் நான் காலடி வைத்தபோது ஜனாப் M.N. அஜ்மைன் அதிபர் அவர்கள் என்னைத் தனது சகோதரியாக வரவேற்றார். கணித ஆசிரியராக, அதன் பின்னர் 2007 முதல் அரசியல் விஞ்ஞான ஆசிரியராக மேலும் பல பாடங்களயும் கற்பித்து வந்தேன்.

இப்பிரதேச பெற்றார்கள் அந்த காலத்தை விட இப்போது பிள்ளைகளின் கல்வியில் கரிசனை காட்டுவது பாரட்டத்தக்கதாகும். அதபராகிய பின்னர் நிறையவே நான் தியாகங்களை செய்ய வேண்டியிருந்தது. மாலை நேர வகுப்பு, இரவு நேர வகுப்பு, விடுமுறை கால வகுப்பு என மாணவர்களை பாடசாலை வளவுக்குள்ளே தக்கவைத்து கொள்ள வேண்டியிருந்தது. வீட்டு சூழலில் படிக்கும் சூழலை உருவாக்க பாடுபட வேண்டியருந்தது. இவை அனைத்திற்கும் இறைதுணையுடன் எனக்கு துணை புரிந்தவர்கள் எனது நல்லாசான்கள் என்றால் மிகையன்று. 2014 முதல் 2022 வரை என்னுடன் கைகோர்த்து பயணித்த பாட ஆசிரியர்களால் தான் O/L, A/L சிறந்த பெறுபேறுகளை பெற்றுத்தர முடிந்துள்ளது. பயிற்றப்பட்ட பட்டதாரி, கல்வியியல் கல்லூரி என அனைத்து வகை ஆசிரியர்களினதும் தேவையுணர்ந்து சேவைபுரிகின்றனர். இவர்கள் சமூகத்தின் வளம். இவ்வாரே Room To Read நிருவனம், Zam Zam Foundation, சப்ரகமுவ பல்கலைகழக முஸ்லிம் மஜ்லிஸ்,





ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழக முஸ்லிம் மஜ்லிஸ் என்பனவும் எமது வெற்றிப் பயணத்தின் பங்காளிகள் தவிரவும் தனிநபர்கள் பலரும் எமது மாணவர்களுக்கும் பாடசாலைக்குமான உதவிகளை பெற்றுத் தந்தமை குறிப்பிட கூடியதாகும்.

## பாடசாலை ஆசிரியர் வளம் பற்றி...

பாடங்களுக்கான பிரதான வளம் எனக்கருதப்படுவது, முக்கியமாக ஆசிரிய வளமென நான் நினைக்கிறேன். மாணவர்கள் கற்கின்ற எல்லாப் பாடங்களுக்குமான ஆசிரிய ஆலணியினர் எப்போதுமே போதிய அளவில் இருந்ததேயில்லை. எல்லா காலமும் குறைபாடுகள் இருந்துள்ளன. இது நேற்றும். இன்றும், நாளையும் தொடர்ந்துக் கொண்டேதான் இருக்கும். அடுத்ததாக பௌதீக வளப்பற்றாக்குறைகளுமே நிறையவே உண்டு. மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாத வகையில் இருக்கும் ஆசிரியர்கள் குறைநிரப்பு செய்து வருவதும், இருக்கின்ற வளங்களில் உச்சப் பயனைப் பெறுவதும் கோடிட்டுக் காட்டக்கூடியதாகும்.

## நீங்கள் பாடசாலைக்கு நிலைநாட்டிய சாதனைகள் எவை?

என்னால் செய்ய முடிந்த தியாகங்களே எனது சாதனைகளென நினைக்கிறேன். ஆசிரியராக இருந்த ஆரம்ப காலங்களில் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களை பயிற்றுவித்து ஈடுபட வைத்தமையால் அகில இலங்கை மட்டத்தில் பல போட்டிகளில், பல சந்தர்ப்பங்களில் அல் பத்ரியா மாணவர்கள் பங்குப்பற்றினார்கள். மாவட்ட மாகாணப் போட்டிகளில் எண்ணற்ற வெற்றிகளைப் பெற்றார்கள்.

Junior Athevement எனும் செயற்றிட்டத்தில் எனது மாணவர்கள் ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. இப்படி இன்னும் பல நகர்வுகள் இருந்தன. தரம் 5, O/L, A/L பரீட்சைகளில். 75% ற்கு மேற்பட்ட பதிவுகளை மேற்கொள்ள கிடைத்தமையானது இறைவனருள். பாடசாலை சார் சமூகத்தின் ஒத்துழைப்பு. பௌதீக வளத் தேவைப்பாடுகளின் நிவர்த்தியிலும் சில சாதனைகல் உளம் குளிர வைக்கின்றது. பாடசாலை ஆரம்பித்து 48 வருடங்களின் பின்னர் சிற்றூண்டிச் சாலை ஆரம்பிக்கப்பட்டமை, பாடகலை நுழைவுப் பாதை செப்பனிடப்பட்டமை, 8x20' அரிய வகுப்பறைக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டமை, மாணவர் மேசை, கதிரை



பெறப்பட்டமை, இவ்விருவிடயங்களிலும் கௌரவ ஊவா மாகாண முதலமைச்சரான சாமர சம்பத் தஸநாயக்க அவர்களை நன்றிபூர்வமாக ஞாபகப்படுத்துகின்றேன். பாடசாலை பேண்ட் வாத்தியக் குழு உருவாக்கப்பட்டமை, கட்டிட பழுதுபார்த்தல், மலசல கூடத் தொகுதிகள் 03 பெறப்பட்டமை, பாடசாலை முன்பக்கத்தில் 30 M நீள கம்பி வலை வேலி நிர்மாணிக்கப்பட்டமை (முன்னால் பாராளுமன்ற அமைச்சர் திரு.வடிவேல் சுரேஷ் அவர்களை நன்றி பூர்வத்துடன் ஞாபகப்படுத்துகிறேன்) மிக அண்மைக் காலத்தில் பாடசாலைக்கு மகுடமிட்டாற் போல அழகிய பெயர்ப்பலகை பொருத்தப்பட்டமை மற்றும் காவலாலி அறை நிர்மானம் (இதுதொடர்பில் இப்பாடசாலையின் பழைய மாணவரான கௌரவ திருவாளர் ராம்ராஜ் அவர்களையும், இணைப்பாளராக செயற்பட்ட ஆஸாத் ஆசிரியர் அவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.) இறுதியாக அதிபர் விடுதிமற்றும் ஆசிரியர் விடுதிக்கு தனியான நீர்மானிகளைப் பொருத்துவதில் பல மாதங்கள் கடும் முயற்சி செய்ய வேண்டியதாயிற்று.

### பாடசாலை அபிவிருத்தியில் எவ்வாறான பங்களிப்பு அவசியமென நினைக்கின்றீர்கள்?

எந்தவொரு பாடசாலையாயினும் அதன் அபிவிருத்தியில் சம்பந்தப்பட் ட அனைத்துத் தப்பினரதும் ஒத்துழைப்பு, கடும் முயற்சி, தியாகம், சேவை என்பன தேவை எனக்கருதுகிறேன். இவை வாய் வார்த்தைகளால் மட்டும் வர்ணிக்கப்படாமல் செயலில் காட்டப்பட வேண்டும். எப்போதாவது வந்து ஏதாவது செய்வோம் என்பதைவிட அவ்வப்போது எட்டிப் பார்த்து இது எனது ஊர்ப்பாடசாலை எனும் உந்துதலுடன் ஏதாவது இருக்கும் குறையை நிவர்த்தி செய்து கொடுப்பது தான் அபிவிருத்திக்கான வழி. இது ஆளணி அல்லது பௌதீக வளம் எது சார்ந்ததாகவும் இருக்கலாம்.

### பாடசாலையின் தற்போதய உயர்தர கல்வி நிலைப்பற்றிய உங்கள் அபிப்ராயம்?

எமது பாடசாலையில் O/L சித்தி அடையும் மாணவர்களில் பலர் கலை துறைத் தவிர்ந்த கற்கைகளை நாடி வேறிடங்களுக்கு சொல்கின்றார்கள். இவ்வாறு சென்ற மாணவர்கள் பலர் பட்டப்படிப்பை முடித்து துறைசார் பாதைகளில் பயணித்துக் கொண்டிருப்பது உவகை அளிக்கின்றது. வேறு சிலர் இடைவிலகியிருப்பது கவலை அளிக்கின்றது.

### எதிர்கால பாடசாலையின் உயர்தர கல்வியில் கலைப்பிரிவைத் தாண்டி வணிகம், உயிரியல் மற்றும் கணித பிரிவுகளை உள்ளடக்குவதாயின் உங்கள் அபிப்ராயம்?

தற்போது A/L கலைத்துறைப் பாடங்களுக்கான ஆசிரியர் வளம் மட்டுமே காணப்படுகிறது, Com, Bio, Maths, ETec, BTec என்பன இருப்பது எவ்வளவோ சிறந்தது. எனினும் மாணவர் தொகை, ஆசிரியர் வளம், இடப் பிரச்சினை, ஆய்வுக்கூட வசதிகள் இப்படி இன்னோரன்ன தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட பல காலம் எடுக்கலாம். எனவே முயற்சியுடன் பொறுத்திருப்போம்.

### பாடசாலையில் நிலவக்கூடிய ஆசிரியர்பற்றாக் குறைக்கான தீர்வுகள் என்ன?

ஆசிரியர் பற்றாக்குறைக்கான தீர்வு விடைக்க்கூற முடியாத வினா, அரச ஊழியர்களின் ஓய்வு பெறுதல், இட மாற்றம், புதிய நியமனம் வழங்க முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருக்கும் அரசாங்கம், வெளிநாடுகளை நோக்கிய படித்தவர்களின் குடிபெயர்வு... இப்படி பல...

### பாடசாலையினை தேசிய பாடசாலையாக மாற்றியமைப்பதற்கு ஏதுவான காரணிகளை குறிப்பிடுங்கள்?

தேசிய பாடசாலையாக மாற்றியமைக்க ஏதுவான ஒரே ஒரு காரணி எனது கணிப்பில் பரப்பளவில் பெரிய காணி இருப்பதொன்றே.

### பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் அபிவிருத்தி சங்கம் ஆகியவைகளில் பாடசாலை வழிநடத்தி செல்ல போதுமான ஒத்தாசைகளும் உதவிகளும் செவ்வனே நிறுவேறுகின்றதா?

இந்த நேர்காணலின் முக்கியமானதொரு வினாவினைத் தொடுத்துள்ளீர்கள் SDC, OBA, it பாடசாலையின் முதுகெழும்புகளாக நினைக்கிறேன். மேலே பேசிய எந்த இடத்திலும் நான் இந்த இரு அமைப்புக்களையும் சுட்டிக்காட்டவில்லை. கரணம் அவற்றின் ஆற்றல்களை ஆக்கத்திறன்களை, சமூகத்திற்கான பங்களிப்பினை குறுகிய காலத்தில், செய்யப்பட்ட அரிதான சேவைகளைத் தனியே கோடிட்டுக் கட்டவேண்டும் எனும் ஆசை, அவா தான், SDC- பாடசாலை அபிவிருத்திக் குழு பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகள், பெற்றார்கள், பிரதிநிதிகள் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை முகாமைத்துவ குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகின்றது. பாடசாலை வளத்தேவைகளை நிறவேற்றித் தருவதில் 2 வருட 4 வருட பதவிக் காலத்தில் அதிபருக்கு உதவுகிறார்கள்.

இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் வரலாறு மிகக் குறுகியதாகும். எனது பதவிக் காலத்தில் நான் பல தடவை முயன்றும் முற்றுப்பெறாத முயற்சியாகிவிட்டது. எல்லாம் உல்ல இறைவனிடன் துணைக்கொண்டு 2018 இறுதிப் பகுதியில் அல் பத்ரியா பழைய மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. எமது பாடசலையில் வரலாறு படைத்த O/L - A/L மாணவ குழுவிற்கு சுகாதார பாட செயலமர்வுடன் எமது OBA தனது 06 கல்விக்கு கரம் நீட்டும் பயணத்தை ஆரம்பித்ததெனலாம். OBA யின் சேவைகளை அதிகமதிகம் உணர்ந்தது என்னைத் தவிர வேறு யாருமில்லை எனலாம். நாட்டில் அசாதரண சூழ்நிலை நிலவிய போது மாணவர்களின் கல்வி நலன்கருதி வினாத்தாள் தொகுதிகளை 1-13 வகுப்பு மாணவர்களுக்கு பெற்றுத்தந்தமை, O/L, A/L தரம் 5 மாணவர்களுக்கு செயலமர்வுத் தொடர்களை நடாத்தியமை, A4 தாள் பக்கட்டுக்களைப் பாடசாலைக்கென பெற்றுத்தந்தமை உள்ளிட்ட அரிய பல சேவைகளை ஆற்றிவருகின்றது.

நாம் பாடசாலை சிற்றுண்டிச்சாலையை ஆரம்பித்த போது நிதியுதவி கடனாகத் தரப்பட்டத்னையும் குறிப்பிடலாம். OBA என்பது எனது அதிபர் காலத்தில் பாடசாலக்குக் கிடைத்த வரப்பிரசாதம் எனலாம். அதன் இயங்கு நிலை உறுப்பினர்களை நான் நன்றியுடன் பார்க்கின்றேன். தமது நேரக்காலம், பொருள் உழைப்பு என்பவற்றை இளம் சமூகத்தின் விடிவுக்காக செலவிட்டு நிதிதிரட்டி வீழ்ச்சியடையும் நிலையிலிருந்த ஒரு சமூகத்தின் எழுச்சிக்கான தமது பங்களிப்பினை செய்த அல் பத்ரியா பழைய மாணவர் சங்கம் சார் அனைத்துக் பேருக்கும் எனது நன்றிகள். பரந்த உலகின் எந்த மூலையில் இருந்தாலும் இப்பாடசலையின் கல்விக்கான உங்கள் காணிக்கை தம்பி தங்கைகளால் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இறைவன் பதில் தருவான்.





### உங்களுக்கு அல்லது உங்களது சேவைக்கு இதுவரை கிடைத்த பாராட்டுக்கள், பரிசுகள், விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

பிரதி உபகாரம் எதிர்ப்பார்க்காதது எனது சேவை பிரார்த்தனை ஒன்றே எனக்கு விருது, விருதுகள் எல்லமாம் நான் ,றுதியாக பாடசாலையை விட்டுப் பிரியும் போது எனது ஆசிரியர்கள், எனது மாணவர்கள், எனது பெற்றேர்கள், எனது பழைய மாணவர்கள், எனது பாடசாலை சிற்றூழியர்கள் எனக்காக சிந்திய "கண்ணீர்" எனது வாழ்வில் கிடைத்த பாராட்டு, பரிசு, விருது எல்லாமே!

### ஓய்வுக்கு பின்னால் எதிர்கால உங்களது வாழ்வு பற்றிய எதிர்பார்ப்புகள் அல்லது அடுத்த முயற்சிகள் குறித்து?

38 வருட ஒரு முக சேவையை விட்டு விலகி என்னை முதலில் சுதாகரித்துக்கொள்ள சிறிது காலம் எடுக்கும் என நினைக்கிறேன். கைநழுவிப் போன கடமைகள் கண்டும் காணாமலிருத்த பொறுப்புக்கள், கணவனுக்கான பிள்ளைகளுக்கான, குடும்ப உறவுகளுக்கான எதிர்ப்பார்ப்புக்கள், அயலவர், அந்தியர், உராரகளுக்கான ஒத்துழைப்புக்கள் இவை எல்லாம் எனக்காக



காத்திருக்கின்றன. பார்த்திருக்கின்றன. இன்ஷா அல்லாஹ். எல்லாவிற்றுக்கும் மேலாக, எனது பழைய பாடசாலை எனது பாதங்கள் அதிகமதிகம் பதிந்த மண். நான் அதிகமாக சுவாசித்த பூமி. எமது மழலைகள், எனது ஆசிரியர்கள். என்னைத் தியாகியாக்கிப் பார்த்த பூமி. அதை என்றும் மறவேன் இன்னும் ஏதேனும் செய்யனும் என்ற மனநிலையில் எதிர்ப்பார்ப்புடன் இருக்கின்றேன் .

## வளர்ந்து வரக்கூடிய இளம் ஆசிரியர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

இளம் ஆசிரியர்களே இது உங்களுக்கான ஒரு அனுபவக்கீறல், புனிதமான ஆசிரியப் பணி ஒரு பரிசு. அளந்து, நிறுத்து, மற்றவருடன் ஒப்பிட்டு வருடத்துக்கான அத்தனை லீவுகளையும் அனுபவித்து இதனை செய்ய முடியாது. உலகை அறியத் துடிக்கும். உயிருள்ள ஜீவன்கள் மாணவர்கள். எனவே உணர்வுபூர்வமாக உலகைக் காட்டுங்கள். நாளைய சிற்பிக்களை செதுக்கி சிலையாக்குங்கள். உங்கள் பணியை செவ்வனே செய்யுங்கள்.

## உங்களைப் போன்று வளர்ந்து வரக்கூடிய பெண் ஆளுமைகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

விரல் விட்டு எண்ணிவிடும் நிலை மாறி இன்று பெண் ஆளுமைகல் வெளிப்படுவது ஆரோக்கியமான ஒரு நிலைமை எனலாம். தலைவர்கள் பிறப்பதில்லை. தலைவர்கள் உருவாகின்றார்கள். அது ஆண் அல்லது பெண் என்பதைவிட, ஆளப்பிறந்தவர்கள் அல்லது ஆளப்பட வேண்டியவர்கள் என்பதை விட சரியாக வழிக்காட்டுபவர்களாக இருந்து விட்டால் அதுவே வெற்றி. மென்மையான பெண்மைக்குள்ளிருந்து வரம்புகளை மீறாத வகையில் கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் என்பன மாறாத முறையில் முன்னே செல்லலாம். முயற்சியுடையோருக்கு என் வாழ்த்துக்கள்!

## உங்களது பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எனது பாடசாலை ஆசிரியர்கள் மெழுகுவர்த்திகள் என்றே கூறவேண்டும். ஏணியாகவும், தோணியாகவும் இருந்தவர்கள். இனியும் இவ்வாறே இருக்க வேண்டுமென்பது எனது ஆசை. தரமும், குருவும் தலைவிதிப்படி என சான்றோர் பகன்றார்கள். எமது பாடசாலை மாணவர்களைப் பொறுத்த வரை எழுதிச் செல்லும் விதியின் கை தன் வேலையை சரியாக செய்துள்ளது. மனதுள் ஒரு கவலை இல்லாமலில்லை அது எமது ஆண் மாணவர்கள் பற்றியது தான். ஒழுக்கம், கல்வி, பெறுபேறு, எதிர்காலம், சொந்தப் காலில் நிற்றல், சமூகத்திற்கான தனிமனித பொறுப்பு, கூட்டுப் பொறுப்பு, குடும்பத் தலைமை சவால்கள், துறைசார் தேவைகள் மற்றும் ஒரு இனத்தின் நிலைபேறு போன்ற இன்னோரன்ன விடயங்களுக்கு விடைகாணும் பொறுப்பை சுமந்துள்ள ஆண் மாணவர்கள் சரியாக செயற்பட வேண்டும். பெற்றார், ஆசிரியர்களின் பார்வையில் இவர்கள் பாதுகாக்கப்படுவதவசியம்.

## இந்த நேர்காணல் மூலமாக விசேடமாக ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?

விஷேடமாகக் கூறுவது, என் வாழ்வினைப் பயனுள்ளதாக்கித்தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே நன்றிகள் உரித்தாகட்டும். இறைவனை மறந்து இஸ்லாத்தைத் துறந்து நான் என்றுமே செயற்படவில்லை. இதுதான் எனது வெற்றியின் இரகசியம். எனது இந்த கல்விப் பயணத்தில் என்னோடு இணைந்து உதவி ஒத்தாசை புரிந்த அனைத்துப் பேர்களுக்கும், நிறுவனங்களுக்கும், ஏனைய பாடசாலை அதிபர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும், எனது நிழலாய் எனைத் தொடர்ந்த பாடசாலை ஆளணியினருக்கும், உதிராதி பூக்களாய், வாடாத மலர்களாய் வாசம் வீசும் பாசம் மிகு எம் மாணவர் செல்வங்களுக்கும் என் நன்றிகளும் வாழ்த்துக்களும். "மாற்றத்திக்காக மாறுவோம்"





# நேர முகாமைத்துவம்

சி.எம் மலீஹா உம்மா
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்
எம்பிளிபட்டிய கல்வி வளையம்

நேரம் என்பது மிக மிக பெறுமதி வாய்ந்த ஒன்று என்பதை எல்லா அறிஞர்களும் ஏற்றுக் கொள்வர். கடந்த நேரத்தை விலை கொடுத்து வாங்கிக் கொள்ள உலகில் உள்ள எந்த பணக்காரருக்கும் சக்தி இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையே. இயற்கையும் குறித்த நேரத்தில் அதன் செயற்பாடுகளை செய்ய தவறுவதில்லை. சூரியன் அதன் அச்சில் குறித்த வாரே சுழன்று கொண்டு இருக்கின்றது இரவு பகல் உரியவரே உரிய நேரத்தில் நடைபெற்று கொண்டு இருக்கின்றது இறைவன் அனைத்தையும் திட்டமிடலின் கீழ் இயக்கிக் கொண்டிருக்கின்றான்.

மனிதன் ஏனோ நேரத்தை முகாமைத்துவம் செய்ய தவறுகின்றான் என்பது கவலைக்கிடமான செயலாகும். அவனது செயற்பாட்டில் திட்டமிடல் காணப்படுவதில்லை திட்டமிடல் மூலமே நேர முகாமைத்துவத்தை செயல்படுத்த முடியும் என்பது திண்ணம். ஆசியா கண்டத்தை சேர்ந்த அதிகமான நாடுகளில் உள்ள மக்கள் மணித்தியாலயத்தை கணித்து செயல்படுகின்றனர் ஒரு மணித்தியாலம் பிந்தினாலும் சாதாரணமாக ஒரு மணித்தியாலம் தானே பிந்தியது என கவலைப்படுவதில்லை.

ஆகாய விமானத்தில் செல்ல பயணிக்கும் ஒரு பயணி ஒரு மணித்தியாலத்தை மணித்தியாலங்களை கடத்துவதால் எத்தனை லட்சம் ரூபாய்களை இழக்க நேரிடும் ஆனால் அமெரிக்கர்களோ மணித்தியாலம் நிமிடத்தையும் கருத்தில் கொண்டு செயல்படுகின்றனர். நிமிடத்தையும் பெரிய இழப்பாக கருதக்கூடியவர்கள். ஜப்பானியர்களோ செக்கெனையும் கருத்தில் கொண்டு செயற்பட கூடியவர்களாக இருக்கின்றனர்.

எனவேதான் 1945 ஆம் ஆண்டில் ஹிரோஷிமா நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்கள் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அணுகுண்டு வீசப்பற்று முற்றும் எரிந்து சாம்பலாகியும் கூட இயற்கை வளங்கள் குறைவாக காணப்படும் நாடாக இருந்தும் மனித வள செயற்திறன், நேர முகாமைத்துவம், சிறந்த திட்டமிடல், தூரநோக்கு என்பவற்றால் அது வளர்ச்சி அடைந்த நாடாக காணப்படுகின்றது.

ஒரு செக்கெனில் கண் அயரும் சாரதி, விபத்தால் பல உயிர்கள் பலியாகின்றன. ஒரு செக்கனின் பெறுமதியை ஓட்ட வீரரான உசைன் போல்ட் வெற்றிக்கம்பத்தை எட்டிப் பிடிக்கும் போது விளங்கி இருப்பார். பரீட்சையை உற்சாகத்துடன் எழுதிக் கொண்டிருக்கும் மாணவனுக்கு நேரம் முடிவடையும் போது அதன் பயனை உணர முடிகின்றது

எனவே குழந்தை பருவம் முதல் தமது பிள்ளைகளுக்கு நேரத்துக்கு இயங்குவதற்கு கற்றுக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும் அதற்கு தான் நேரத்துடன் இயங்குவதற்கு முதலில் கற்றுக் கொள்ள வேண்டும் தொழில்

புரியக்கூடிய அநேகர் நேர முகாமைத்துவத்திற்கு ஏற்ப இயங்குவதை காணக்கூடியதாக இருக்கின்றது அவர்கள் கூட சரியான நேர முகாமைத்துவம் செய்யாத சந்தர்ப்பங்களில் காரியாலயங்கள், பாடசாலைகள், தொழிற்சாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றில் நிர்வாகத்துடன் முரண்படக்கூடிய தன்மையை அவதானிக்க முடிகின்றது. இன்று சமூகத்தில் அநேகமான பிள்ளைகள் நடத்தை பிறழ்வு போதைப்பொருள் பாவனை சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றிற்கு ஆளாவதற்கு காரணம் தமது பிள்ளைகளை கண்காணிப்பதற்கு நேரத்தை பயன்படுத்த தவறி விடல் முக்கிய காரணம் என்னலாம்.

பல வேலைப்பளு என்ற காரணத்தினாலும் தாய் தந்தை குழந்தைகள் என்ற குடும்ப உறவை பேணி நடப்பதற்கு நேரத்தை ஒதுக்கி கொள்வதில்லை பிள்ளைகள் எதிர்பார்க்கும் அன்பு அவர்களுக்கு கிடைப்பதில்லை. இலத்திரனியில் ஊடகங்கள், தொலைபேசிகள் என்பவற்றில் வீட்டில் இருக்கும் நேரங்களில் தொடர்புபடுவதால் வீட்டில் இருக்கும் சொற்ப நேரத்தையும் குடும்ப உறவை பேண முடியாத அவல நிலை ஏற்படுகின்றது. இதனால் குடும்ப உறவுகளிலும் விரிசல்கள் ஏற்படுகின்றது.

எனவே தொழில் பதவி உயர்வுகள் உழைப்பு குடும்ப வாழ்க்கை உடல்நலம் சமய வழிபாடு குழந்தைகளின் முன்னேற்றம் ஓய்வு போன்ற இன்னோர் அன்ன விடயங்களில் உரிய நேர முகாமைத்துவத்தை திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை அடையாளம் என்பது உறுதி.

அருள் மறையாம் அல்குர்ஆன் எமக்கு இலகுவான நேர முகாமைத்துவத்தின் ஊடாக ஆன்மீக லௌகீக வாழ்க்கையை பலப்படுத்தி முன்னுதாரணமான வழிமுறைகளையும் காட்டித் தந்துள்ளது என்றே கூறலாம் எனவே நாமும் எமது வாழ்வை நேர முகாமைத்துவத்தின் மூலம் வளமாக்கிக் கொள்வோம்



sky தமிழ்

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

# தனித்துவமே நமது அடையாளம்



துணிந்தெழு சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எழுத்தாளுமைகளுக்கும்
வாசகர் நெஞ்சங்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும்
இதயபூர்வமான நன்றிகள்...!




#Thuninthelu www.skytamilmedia.com